Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 9, 2022

புதன்கிழமை பெப்ரவரி 09, 2022 | ஒளி: 07 கதிர்: 227 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



ஏழுமலையான் தரிசனம்

## தனியார் ஜெட் குறித்து பிரதமரிடம் விசாரணை

பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுக்கு எதிராக, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தொடர்ச்சி P2

வெளிநாடுகளில் தனக்கிருக்கும்

# கறுப்பு பணத்தை கொண்டு வருகிறார் கோட்டா



## சாணக்கியன் தெரிவிப்பு: பசிலை விசாரிக்காதது ஏன் எனக் கேள்வி

வெளிநாடுகளிலுள்ள தனது கறுப்புப் பணத்தை நாட்டுக்குள் கொண்டுவருவது, தனக்கு நெருக்கமானவர்களை வழக்குகளில் இருந்து விடுதலை செய்வது ஆகியவற்றையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ மேற்கொண்டு வருகிறார் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (08) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரிவித்தாவது,

ஜேர்மனியில், எத்தனை பேர் இறந்தாலும் பரவாயில்லை, தான் நினைத்ததைச் செய்ய வேண்டுமென ஹிட்லர் செயற்பட்டதைபோல, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவும் செயற்பட்டு வருகிறார்.

தொடர்ச்சி P2

காலிக்கும் நுவரெலியாவுக்கும்

## இனப்பாரபட்சம் காட்டிவிட்டு அம்பிகாவை சாடுவது ஏன்?



காலிக்கு வெள்ளிக் கரண்டி, நுவரெலியாவுக்கு தகரக் கரண்டி. இது இனப் பாரபட்சமில்லையா என்று கேள்வியெழுப்பிய தமிழ் முற்போக்கு கூட்டணி- ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், இந்நாட்டில் இனப் பாரபட்சம் இருப்பதாக மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகா சற்குருநாதன் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கிய சாட்சியத்தில் கூறியதற்கு, வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் பூமிக்கும் வானத்துக்குமாக குதிக்கிறார் என கேள்வி எழுப்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மருந்து தட்டுப்பாட்டால் மரணிக்கும் அபாயம்



பா.நிரோஸ்

நாட்டில் மருந்துப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக, வைத்தியசாலைகளில் உள்ள நோயாளர்கள் உயிரிழக்கும் நிலை ஏற்படுமென எச்சரித்துள்ள முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித் சேனாரத்ன,

தொடர்ச்சி P2

ரவிகரன், சிவாஜிலிங்கத்துக்கு எதிரான வழக்கு

## ஜூலை 26இல் விசாரணை

செ.கீதாஞ்சன்

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கான தினமாக ஜூலை 26ஆம் திகதியை முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, நேற்று (08) அறிவித்தார்.

தொடர்ச்சி P2





## கெஹலிய பேச்சு தோல்வியில் முடிந்தது

### வேலைநிறுத்தமும் தொடர்கிறது

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கும் சுகாதார சேவை தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று (08) மதியம் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## ஏலத்தில் விடப்பட்ட இந்தியப் படகுகள்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், காங்கேசந்துறை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியப் படகுகள் ஐந்தும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. கொழும்பில் இருந்து வந்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள தலைமையக அதிகாரிகள் குழு, ஏலமிட்டது.

நீர்கொழும்பு, கொழும்பு, புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களில் இருந்து வருகை தந்தவர்கள் இந்த ஏலத்தில் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

எரிபொருள் விலை அதிகரிப்பு

## இணைவான தீர்மானங்கள் எடுக்கப்படலாம்

மகேஸ்வரி விஜயனந்தன்

இந்திய எரிபொருள் நிறுவனத்தின் விலை அதிகரிப்பால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய சிக்கலுக்கு முகம்கொடுத்துள்ளதாக அதன் தலைவர் அறிவித்துள்ளார். எனினும், இதுதொடர்பில் அமைச்சரவையில் எவ்விதமான கலந்துரையாடல்களும் முன்னெடுக்கப்படவில்லை என அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பொதுமக்களுக்கு பால்மா போதை



பால்மாவில் காணப்படும் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெரியுமா என்று கேள்வி எழுப்பிய போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பால்மாவைப் பயன்படுத்துவது ஒரு போதையாக மாறிவிட்டது என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

**“ பால்மாவிலுள்ள தீங்கு விளைவிக்கும் பொருட்கள் குறித்து பொதுமக்கள் அறிந்தால் பால்மா பொதிகளை கொள்வனவு செய்வதற்கான வரிசைகள் குறையும். பொதுமக்களுக்குத் திரவப் பாலில் பல தெரிவுகள் உள்ளன. சவால்கள் மற்றும் பிரச்சினைகள் எவையாக இருந்தாலும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதில் ஜனாதிபதி தொடர்ந்து கவனம் செலுத்துவார்**

கொரோனா தொற்றுக்கு மத்தியில்

## பரீட்சை நடத்துவது உன்னதமான வெற்றி

மகேஸ்வரி விஜயனந்தன்

வேகமாகப் பரவும் தொற்றைத் தோற்கடித்து, பரீட்சைகள் நடத்தப்படுவது உன்னதமான வெற்றியாகும் எனத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இலங்கையர் என்ற ரீதியில் நாம் பெற்றுக்கொண்ட வெற்றியாகும் என்றார்.

தொடர்ச்சி P2

பொருளாதார மந்தநிலைக்கு

## கொரோனாவை காரணம் காட்டுகிறது அரசாங்கம்



இலங்கையின் பொருளாதாரம் கடும் மந்த நிலையில் உள்ளது என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இதற்கு முக்கிய மற்றும் ஒரே காரணம் என்று அரசாங்கம் எப்போதும் கொவிட் தொற்றுநோயையே சுட்டிக்காட்டுகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இலங்கை- இந்திய மீனவர்கள் பிரச்சினை

## இருதரப்பு உறவுகளைப் பாதிக்காது



மகேஸ்வரி விஜயனந்தன்

இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினை என்பது ஒரு புதிய விடயமல்ல எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, இவ்வாறான சம்வங்களால் இரு நாடுகளினதும் இராஜதந்திர உறவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (08) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், இலங்கையில் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளை ஏலத்தில் விடுவது நியாயமா?

தொடர்ச்சி P2

2019 முதல் இலஞ்ச வழக்குகளிலிருந்து

## அமைச்சர்கள் உள்ளிட்ட 72 பேர் விடுதலை



தற்போதைய நிர்வாகம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் உட்பட 72 அரச அதிகாரிகள் இலஞ்ச வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சி தெரிவித்தது.

கொழும்பில் நேற்று (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தொழில்நுட்பக் காரணங்களை முன்வைத்து வழக்குகளை வாபஸ் பெறுவதற்கான தீர்மானத்தால்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கறுப்புப் பணத்தை கொண்டு வருகிறார் கோட்டா

ஹிட்லர் போலவே நாட்டை அபிவிருத்தி செய்வதாகக் கூறியே ஜனாதிபதியும் ஆட்சிக்கு வந்தார் என்றும் தற்போது ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் பலரையும் அவர்களுக்கு எதிரான வழக்குகளில் விடுவிப்பதையே ஜனாதிபதி செய்கிறார் எனவும் குற்றஞ்சுமத்தினார்.
தனக்கு நெருக்கமானவர்களை வழக்குகளில் இருந்து விடுதலை செய்வதையும், வெளிநாடுகளில் உள்ள தனது கறுப்புப் பணத்தை நாட்டுக்குள் கொண்டுவருவதையுமே ஜனாதிபதி செய்து வருகிறார் எனவும் தெரிவித்தார்.
வடகொரியாவில் இருந்து கறுப்புப் பணத்தை செலுத்தி ஆயுதங்களை கொண்டுவந்ததாக ஜனாதிபதியின் அருகில் உள்ள நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ கூறியிருக்கிறார். இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவரையிலும் ஏன்? விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கேள்வியெழுப்பினார்.
நாட்டில் நடந்துகொண்டிருக்கும் பொருளாதார யுத்தத்தில் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர் எனவும் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பாது தங்களது வேலைகளையே இவர்கள் செய்து வருகிறார்கள் எனவும் குறிப்பிட்டார்.
கொரோனா வைரஸால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளதுபோல, பட்டினியால் நாட்டில் பலர் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், பெருந்தோட்டங்களில் உள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு 80 ரூபாய்க்கு ஒரு கிலோ கிராம் கோதுமை மா வழங்கப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டினார்.
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பேசப்பட வேண்டும். வடக்குக், கிழக்கில் உள்ள மக்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்க வேண்டும் என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகிறது. மாறாக நாட்டை பிரித்துகொடுக்க வேண்டுமென நாம் கூறவில்லை என்றார்.
தங்களது அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை என கூறிக்கொண்டிருக்காமல் தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து அவர்கள் விலக வேண்டும் என கூறினார்.
இதேவேளை, தனது உரைக்கு தொடர்ந்து தடை ஏற்படுத்தும் வகையிலும் பாராளுமன்றத்துக்குப் பொருத்தமற்ற வார்த்தைகளைப் பயன்படுத்தும் ஆளுங்கட்சியின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரினார்.

## தனியார் ஜெட் குறித்து பிரதமரிடம் விசாரணை

கடந்த வருடம் இந்தியாவிலுள்ள திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு தனிப்பட்ட ஜெட் விமானம் மூலம் தனிப்பட்ட பயணத்தை மேற்கொண்டமை தொடர்பில் அவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பிலேயே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.
ஊடகவியலாளர் தரிந்து உடுவகெதரவினால் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவில், 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.
அதற்கமைய, முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக ஊடகவியலாளர் உடுவகெதரவுக்கு ஆணைக்குழுவின் செயலாளர் அப்சரா கல்தேரா, 2022 பெப்ரவரி 2 ஆம் திகதியன்று எழுதிய கடிதத்தின் மூலம் அறிவித்துள்ளார்.
இலஞ்ச ஒழிப்பு சட்டத்தை மீறி தனியார் விமானத்தை பரிசாகப் பெற்றுக்கொண்டு பிரதமர் இலஞ்சம் பெற்றாரா என்பது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அறியமுடிகிறது.
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 2021ஆம் ஆண்டு டிசெம்பர் 23ஆம் திகதியன்று, இரண்டு நாட்கள் தனிப்பட்ட பயணமாக இந்தியாவின் திருப்பதிக்கு தனியார் ஜெட் விமானத்தில் சென்றிருந்தார். திருப்பதிக்கு செல்வதற்காக பிரதமரின் நண்பர் ஒருவர் அந்த விமானத்தை தமக்கு இலவசமாக வழங்கியதாக பிரதமரின் தலைமை அதிகாரி யோஷித ராஜபக்ஷ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கெஹலிய பேச்சு தோல்வியில் முடிந்தது

இதனையடுத்து, சம்பள உயர்வு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து, திங்கட்கிழமை (07) காலை 7 மணியளவில் 18 சுகாதார சேவை தொழிற்சங்கங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர் வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றும் (08) தொடர்ந்தது.
18 தொழிற்சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 65,000 தொழில் வல்லுநர்களின் பங்குபற்றுதலுடன் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
தாதியர்களுக்கு மேலதிகமாக, மருத்துவ ஆய்வாளர்கள், மருந்தாளர்கள், கதிரியக்க வல்லுநர்கள், ஆய்வுகூட நிபுணர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பல பிரிவுகளை சேர்ந்தவர்கள் பணிப்புறக்கணிப்பினை முன்னெடுத்து வருகின்றனர்.
இதனால் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலைகளுக்குச் சென்றிருந்த நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.
நோயாளிகளின் உயிரைப் பணயம் வைக்க அவர்கள் தயாராக இல்லாததால், அவசர அறுவை சிகிச்சைகள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு நடைமுறைகள் வழக்கம் போல் செயல்படுவதால், அத்தியாவசிய மற்றும் அவசர சேவைகளை வழங்கப்படும். நாரஹேன்பிட்டி மத்திய இரத்த வங்கி, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, காஸல் வீதி மகப்பேற்று வைத்தியசாலை, மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை, தேசிய சிறுநீரக வைத்தியசாலை உள்ளிட்ட ஒன்பது பிரதான வைத்தியசாலைகளில் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாது.
புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற ஆபத்தான நோயாளர்களுடன் நெருக்கமாகக் கையாளும் கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் வேலைநிறுத்தத்தில் பங்கேற்க மாட்டார்கள் என்று அரச கதிரியக்க தொழில்நுட்ப நிபுணர்கள் சங்கம் தெரிவித்திருந்தது.

## பரீட்சை நடத்துவது உன்னதமான வெற்றி

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (8) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தொடர்ந்து தெரிவித்த அவர்,
இந்த உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்குரிய சூழலை உருவாக்க முடிந்தமை தொடர்பில், அரசாங்கம் என்ற ரீதியில் மிகவும் மகிழ்ச்சியடையும் தருணமாகும் என்றார். தற்பொழுது நடைபெறும் உயர்தரப் பரீட்சையில் 3 இலட்சத்து 45 ஆயிரத்து 242 பேர் தோற்றும் நிலையில், விசேடமாக கொரோனா தொற்றுக்குள்ளாகி, 26 சிகிச்சை மத்திய நிலையங்களில் சிகிச்சைப்பெறும் 136 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இதற்கான ஏற்பாடுகளை செய்த கல்வி அமைச்சு மற்றும் பரீட்சைகள் திணைக்களத்துக்கும் நன்றி கூறுவதாகவும், இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

## ஜூலை 26இல் விசாரணை

கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம், முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில், மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் காணியை சுவீகரிக்க சென்றபொழுது நில அளவீட்டாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நில அளவைத்திணைக்கள உத்தியோகத்தர்களை கடமைசெய்யவிடாமல் தடுத்து வாகனம் சேதப்படுத்திய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்கு, நேற்று (08) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது
கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்பாக மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டதற்காக, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம். கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட நால்வருக்கு எதிராகவே இந்த வழங்கு தொடரப்பட்டுள்ளது.
இதன்போது பிரதிவாதிகள் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள், நீதவானிடம் விண்ணப்பித்தமைக்கு அமைவாக தொடர்ச்சியாக வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சட்டமாஅதிபரிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவதாக மன்றுக்கு அறிவித்தனர்.
அழைப்பாணை அனுப்பப்பட்டால் மாத்திரம் நீதிமன்றத்துக்கு வருகை தரவேண்டும் என்று உத்தரவிட்ட நீதிபதி, வழக்கு விசாரணைக்கான தினமாக எதிர்வரும் ஜூலை மாதம் 26 ஆம் திகதியை நிர்ணயித்தார்.

## பொதுமக்களுக்கு பால்மா போதை

கண்டியில் நேற்று (08) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.
பால்மாவிலுள்ள தீங்கு விளைவிக்கும் பொருட்கள் குறித்து பொதுமக்கள் அறிந்தால் பால்மா பொதிகளை கொள்வனவு செய்வதற்கான வரிசைகள் குறையும் எனவும் பொதுமக்களுக்கு திரவப் பாலில் பல தெரிவுகள் உள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.
பல மாற்று வழிகள் இருக்கும் போது, பால்மா தட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் மீது குற்றஞ்சுமத்தி மக்கள் வரிசையில் நிற்பது குறித்து ஊடகவியலாளர்கள் கவனம் செலுத்துவதாகவும் இராஜாங்க அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.
உள்ளூர் பொருட்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துவதாகக் கூறிய அவர், சவால்கள் மற்றும் பிரச்சினைகள் எவையாக இருந்தாலும், உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதில் ஜனாதிபதி தொடர்ந்து கவனம் செலுத்துவார் என்றும் குறிப்பிட்டார்.

## இனப்பாரபட்சம் காட்டிவிட்டு அம்பிகாவை சாடுவது ஏன்?

இது தொடர்பில் நேற்று (08) வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, எங்கள் ஆட்சியின் போது, 2019ஆம் வருடம் ஒக்டோபர் 29 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியின்படி, நுவரெலியா, காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் பழைய பிரதேச செயலகங்கள் பிரிக்கப்பட்டோ, தரமுயர்தப்பட்டோ புதிய முழுமையான பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் தீர்மானம்.
இதன்படி புதிதாக வந்த இந்த ஆட்சியில், காலியின் பழைய உப பிரதேச செயலகங்கள், புதிய முழு பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டு கோலாகலமாக திறந்தும் வைக்கப்பட்டுள்ளன.
ஆனால், அதே அரசாங்க வர்த்தமானியில் கூறப்பட்டுள்ள நுவரெலியா மாவட்டத்துக்கான ஐந்து மேலதிக முழு பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதை உதாசீனம் செய்து விட்டு, இரண்டு உப பிரதேச செயலகங்களை மாத்திரம் பெயரளவில் இந்த அரசாங்கம் திறந்து வைத்துள்ளது.
மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகாவை 2005ஆம் ஆண்டு முதல் நான் அறிவேன். கொழும்பில் வெள்ளை வேன் கடத்தல்களுக்கு எதிராக எமது மக்கள் கண்காணிப்பு குழு ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அவர் எம்முடன் இணைந்து செயற்பட்டார்.
அவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கிய சாட்சியத்தில் இந்த பிரதேச செயலகங்கள் பற்றி கூறினாரோ என எனக்கு தெரியாது. ஆனால் இந்நாட்டு இன பாரபட்ச நடப்பில் இது ஒரு சிறிய உதாரணம்.
கடந்த 74 வருட காலமாக இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு உரிமை பகிர்வு, அபிவிருத்தி இரண்டிலும், பித்தளை, தகர கரண்டிகள்தான் காட்டப்பட்டுள்ளன.
அத்தனைக்கும் காலியை விட, நுவரெலியாவில்தான் இந்த பிரதேச செயலக பிரிவில் சனத்தொகை அதிகம். நீண்டகாலமாக அங்கே பிரதேச சபைகளே போதுமானளவு இல்லாமல் இருந்து அவற்றை நாமே பிரித்துக் பெற்றுக்கொடுத்தோம்.
இப்போது அவற்றுக்கு சமாந்திரமாக பிரதேச செயலகங்களை கேட்டால் கிடை க்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## இணைவான தீர்மானங்கள் எடுக்கப்படலாம்

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (8) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தொடர்ந்து தெரிவித்த அவர்,
பெற்றோலியக் கூட்டுதாபனம், எரிபொருள் விலையை அதிகரிப்பது குறித்து எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. சில வேளைகளில் இதற்கு இணைவாக ஏதாவது தீர்மானங்கள் எடுக்கலாமென தான் நினைப்பதாகவும் அதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவித்தார்.
இதேவேளை சீமெந்துக்கு நாட்டில் தட்டுபாடு உள்ளதென தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் அத்தியாவசிய பொருள்கள் தொடர்பில் விரைவான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, நிதியமைச்சர், மத்திய வங்கி மற்றும் சுங்கத் திணைக்களத்துக்கும் ஜனாதிபதி விசேட பணிப்புகளை பிறப்பித்துள்ளார் என்றார்.
எனினும், இந்த நாள்களில் இலங்கையில் சீமெந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளமையும் சீமெந்து தட்டுபாடுக்கான மற்றொரு காரணம் என்றார்.

## அமைச்சர்கள் உள்ளிட்ட 72 பேர் விடுதலை

அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 72 பேர் நன்மை அடைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.
அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டாலும், கடந்த இரண்டு வருடங்களில் நீதிமன்ற வழக்குகளில் இருந்து தனது கூட்டாளிகளை காப்பாற்றியுள்ளதாகவும் சில இலஞ்ச வழக்குகள் ஏறக்குறைய ஐந்து ஆண்டுகளாக விசாரிக்கப்பட்டு வாபஸ் பெறப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.
வழக்குகளை வாபஸ் பெறுவதற்கான தீர்மானம் தொடர்பில், சட்டமா அதிபர் மற்றும் இலஞ்ச மற்றும் ஊழல் ஆணைக்குழுவிடம், எதிர்க்கட்சி எம்.பிக்கள் குழுவொன்று விளக்கம் கோரியதாகவும் நீதிமன்ற வழக்கு எண்களைத் தவிர வேறு விவரங்கள் தங்களுக்கு வரவில்லை என்றும் குறிப்பிட்டார்.
ஊழல்வாதிகளை நீதிமன்ற வழக்குகளில் இருந்து விடுவித்து அவர்கள் சுதந்திரமாக நடமாடுவதற்கு அரசாங்கம் அனுமதிக்கும் என குடிமக்கள் எதிர்பார்க்கவில்லை எனவும் தெரிவித்தார்.

## இருதரப்பு உறவுகளை பாதிக்காது

என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தொடர்ந்து தெரிவித்த அவர், இந்தப் பிரச்சினையால் எந்த சந்தர்ப்த்திலும் இரண்டு அரசாங்கங்களுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. சகோதரத்துவம், நட்பு பாதிக்காமல் இருப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம்.
எனவே பூகோள அரசியல் ரீதியான பிரச்சினைகள் ஏற்படாத வகையில், கடல் எல்லைகளின் வளங்களை, சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கக் கூடிய வகையில் இந்தப் பிரச்சினையை நாம் தொடர்ச்சியாக தீர்த்து வருகிறோம்.
ஆனால் நெருக்கடி ஏற்படும் முகாமைத்துவம் செய்ய முடியாத பிரச்சினை ஏற்படும். மக்கள் உணர்ச்சி வசப்படக் கூடிய நிலை ஏற்படும். ஆனால் இந்திய கடற்படையினரும் இலங்கை கடற் படையினரும் ஒற்றுமையைப் பாதுகாக்கும் வகையில் இது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றனர் என குறிப்பிட்டார்.

## கொரோனாவை காரணம் காட்டுகிறது அரசாங்கம்

கட்டளை நியதிகள் சட்டம் 27/2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் நேற்று (08) எழுப்பிய கேள்வியின் போதே இவ்விடயத்தைத் தெரிவித்தார்.
இந்தப் பொருளாதார வீழ்ச்சியின் சுமை மற்றும் அதனால் ஏற்படும் பெரும் அசௌகரியங்களை நாட்டின் சாமானிய மக்கள் தான் சந்திக்க வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.
நாட்டின் நிதித் தன்மையில் அசாதாரண மாற்றங்கள் அல்லது உறுதியற்ற தன்மை ஏற்படுமாக இருந்தால்,அது தொடர்பாக விழிப்புடன் இருந்து ஒன்றித்த பொருளாதார முகாமைத்துவ நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொறுப்பான நிறுவனங்கள் அன்றிலிருந்து நிறுவப்பட்டுள்ளன என சுட்டிக்காட்டினார். கொவிட் நிலமைகளுக்கு மத்தியிலும் உலகில் வேறு எந்த நாடும் சந்தித்திராத பொருளாதார மந்த நிலையை நமது நாடு சந்தித்து வருவதற்கு அது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய நிதி அமைச்சர், நிதிச் சபை மற்றும் மத்திய வங்கியின் ஊடாக ஆற்ற வேண்டிய தமது பங்கை சரியாக நிறைவேற்றாததே காரணமாகும் என்றார்.

## மருந்து தட்டுப்பாட்டால் மரணிக்கும் அபாயம்

நாட்டை இதிலிருந்து அரசாங்க மீட்டெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.
பாராளுமன்றத்தின் நேற்றைய (08) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், மருந்துப் பொருட்களுக்கு, கட்டுமான நிர்ணமானப் பணிகளுக்கு தேவையான பொருள்களுக்கு தட்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எல்லாவற்றிலும் தட்டுப்பாடு காணப்படுகிறது. 90 அரச வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்கள் இல்லை.
இவற்றுக்கெல்லாம் டொலர் தட்டுப்பாடே காரணம்.
ஸ்ரீமத் சத் ராமநாயக்க என்பவர் அவரது பேஸ்புக்கில், “மருந்துப் பொருட்களுக்கு நாட்டில் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. வைத்தியசாலைகளில் நூற்றுக்கணக்கானோர் இதனால் உயிரிழக்கிறார்கள். நாட்டிலுள்ள எந்தவொரு கடைகளிலும் பனடோல் இல்லை. மருந்தகங்களில் மருந்துகளை வாங்குவதற்கு என்னிடம் பணம் இல்லை. இவ்வாறான மோசமான நிலை வேறெங்கும் நடக்குமா?” என பதிவிட்டுள்ளார் என்றார்.
நல்லாட்சி அரசாங்கத்தில் இலவசமாக வழங்கப்பட்ட மருந்துப் பொருட்களுக்கு தற்போது பணம் கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

## ஏலத்தில் விடப்பட்ட இந்தியப் படகுகள்

காரைநகரில் இந்தியப் படகுகள் 135, நேற்று முன்தினம் (07) ஏலத்தில் விற்பனைச் செய்யப்பட்டன. காங்கேசன்துறையில் நேற்றையதினம் (08) 5 படகுகள் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் தற்போதைய நிலைக்கு

# பசிலே பொறுப்பு



நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவே பொறுப்பேற்க வேண்டுமென தெரிவிக்கும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, தனது பணியை பசில் செய்யத்தவறியமையே நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டின் பொருளாதாரம் பாரதூரமான அளவுக்குப் பின்னோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. நாட்டின் அனைத்துப் பிரச்சினைக்கும் அரசாங்கம் கொரோனாவே காரணம் என்கிறது. எனினும் வேறெந்த நாடுகளிலும் கொரோனாவால் பொருளாதாரம் இந்தளவுக்குப் பாதிக்கப்படவில்லை.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கு நிதி அமைச்சர், நிதிச் சபை, மத்திய வங்கியே பொறுப்புக்கூற வேண்டும். இவர்கள் அனைவரும் அவர்களின் பணிகளை முறையாகச் செய்யத்தவறியமையே தற்போதைய நிலைமைக்குக் காரணம் எனவும் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்குச் செல்வோருக்கு

# 15 ஆயிரம் டொலர் காப்புறுதி

■ பா.நிரோஸ்



வெளிநாடுகளுக்கு தொழில்களுக்காக செல்லும் இலங்கையர்களுக்கு 15 ஆயிரம் அமெரிக்க டொலர் காப்புறுதி கட்டாயம் வழங்கப்படும் என தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) அமர்வில் கலந்துகொண்டு வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் அந்நாடுகளில் இருந்து இலங்கைக்கு அனுப்பும் டொலர்களுக்கு குறைந்தது 240 ரூபாய் செலுத்தப்பட வேண்டுமென தான் திறைசேரியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் வெளிநாடுகளில் பணிபுரிபவர்களுக்காக எனது அமைச்சின் ஊடாக காப்புறுதி வழங்க திட்டமிட்டுள்ளோம். வெளிநாடுகளுக்கு தொழில்களுக்காக செல்லும் இலங்கையர்களுக்கு கட்டாயமாக 15 ஆயிரம் அமெரிக்க டொலர் காப்புறுதி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டம்

# நோயாளர்களுக்கு எதிரானது



நோயாளர்களுக்கு எதிராகவே சுகாதார தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்பதாக இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

சுகாதார தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். இதனால், நாட்டின் சுகாதாரத்துறையில் பாரதூரமான பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. தொழிற்சங்க உரிமைகளுக்குப் பதிலாக, அரசியல் நோக்கங்களுக்காகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

எந்தவொரு நாட்டிலும் நோயாளர்களுக்கு எதிராகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை. ஆனால், இலங்கையில் தற்போது நோயாளர்களுக்கு எதிராகவே போராடுகிறார்கள். இதேவேளை தற்போது போராட்டத்தில் ஈடுபடுபவர்களில் பலர் எதிர்க்கட்சி எம்.பிகளின் நெருங்கிய நண்பர்களாவர் என்றார்.

மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாட்டுக்கு

# கொரோனா காரணமில்லை

■ பா.நிரோஸ்



நாட்டில் நிலவும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகளுக்கு கொரோனா வைரஸ் காரணமில்லை எனத் தெரிவிக்கும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், கொரோனா வைரஸின் ஆரம்பக் காலத்தில் அரசாங்கம் முட்டாள்தனமாக நடந்துகொண்டது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டால் மருந்துப் பொருட்களுக்குப் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி இல்லை என்பதே இதற்குக் காரணம். மருந்துகளுக்கான தட்டுப்பாடுகளுக்கு கொரோனா காரணமில்லை.

நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குக் கொரோனா வைரஸ் காரணமில்லை. வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களே காரணம் என அமைச்சர் உதய கம்மன்பிலவே கூறியிருக்கிறார்.

கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த காலப் பகுதியில், அரசாங்கம் முட்டாள்தனமாக நடந்துகொண்டது. மூடநம்பிக்கைகளின் பின்னால் சென்றது எனவும் அவர் தெரிவித்தார்.

> **மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதி இல்லாமை காரணமாகவே, மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குக் கொரோனா வைரஸ் காரணமில்லை**

பிரதேச செயலகம்

# காலிக்குக் கிடைத்தது நுவரெலியாவுக்குக் கிடைக்கவில்லை

■ பா.நிரோஸ்



ஒரே வர்த்தமானி அறிவித்தலில் வெளியான பிரதேச செயலக அதிகரிப்பு, காலி மாவட்டத்தில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளபோதிலும், நுவரெலியா மாவட்டத்தில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என அம்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பிரச்சினைக்கு, கொரோனா வைரஸே காரணமென அரசாங்கம் சொல்கிறது. ஆனால், நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு கொரோனா வைரஸ் காரணமில்லை என அமைச்சர் உதய கம்மன்பில கூறுகிறார். யார் சொல்வது உண்மையெனத் தெரியவில்லை என்றார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (08) விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தவறான கொள்கைகளே நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்குக் காரணம். நாட்டில் அரிசி இல்லை; காஸ் இல்லை; மின் துண்டிப்பு என பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. பொருளாதார நெருக்கடிளுக்கு இந்தியாவே உதவி செய்துள்ளது. 900 மில்லியன் ரூபாய் இந்தியா வழங்கியுள்ளது. இன்னும் ஒரு பில்லியன் ரூபாயை கடனாகப் பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தை நடக்கிறது. இதற்காக இந்தியாவுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் நான் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

இதேவேளை, இந்தியாவைப் பகைத்துகொள்வதால் இந்தியாவுக்கு எந்தவிதமான நட்டங்களும் இல்லை. இலங்கைக்கே நட்டம்.

நாட்டின் தற்போதைய நிலைமைகளால் மலையக மக்கள் உணவுக்குக்கூட சிரமப்படுகிறார்கள். 15 கிலோ கிராம் மாவை வழங்குவதாக அரசாங்கம் கூறியது. ஆனால் அது வழங்கப்படவில்லை. 80 ரூபாய்க்கு வழங்குவதாக கூறிய மாவும் இல்லை. ஆயிரம் ரூபாய் சம்பளமும் இல்லை.

அரச ஊழியர்களுக்கு வழங்கியதுபோல 5,000 ரூபாய் கொடுப்பனவு பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும் என்றார்.

# அதிபர் நியமனத்தில் அழுத்தங்களா?

## ஆராய வேண்டும் என்கிறார் ஜனாதிபதி



தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் நியமனத்தில், விண்ணப்பதாரிகளிடமிருந்து அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதா எனக் கண்டறியுமாறு, கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

தேசிய பாடசாலைகளுக்கான அதிபர்கள் நியமனத்தின்போது, விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு, அதன் பின்னரான தேர்வுகளின்போது, அரச சேவை ஆணைக்குழுவுக்கோ அல்லது கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கோ, விண்ணப்பதாரிகளால் ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு உள்ளனவா என்பது தொடர்பில் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு, கல்வி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதியால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தும்

# தம்பதி கைது

களுபோவில, கொஹுவல பிரதேசத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஹெரோய்னுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட 40 வயதுடைய சந்தேகநபரிடமிருந்து ஒரு கிலோ கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட பெண்ணும் அவரது கணவரும் இணைந்தே போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெண்ணின் கணவர், பஸ் நடத்துநராக வேலை செய்து வருவதாகவும், இதனால் போதைப்பொருளை அவர் பஸ்ஸில் கடத்தி வந்திருக்கலாமென சந்தேகிக்கும் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# இரத்தினக்கல் கொள்வனவில் வரி

## பேருவளை நகர சபையில் யோசனை



■ துசித குமார டி சில்வா

பேருவளை நகர சபைக்கு உட்பட்ட இரத்தினக்கல் ஏல சந்தையில் இருந்து இரத்தினக்கல்லை கொள்வனவு செய்யும் வெளிநாட்டவர்கள், பேருவளை நகர சபைக்கு வரி செலுத்த வேண்டுமென்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.


பேருவளை நகர சபையின் மாதாந்த கூட்டத்தின்போது அதன் தவிசாளர் மசாஹிம் மொஹமட் மேற்கண்டவாறு யோசனையை முன்வைத்துள்ளார். மேலும் இடைக்கால யோசனையாக இதனை முன்வைத்து கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனையால், பேருவளைக்கு வந்து கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியில் இரத்தினக்கல்லை கொள்வனவு செய்யும் வெளிநாட்டவர்களால், மாதாந்தம் 10 இலட்சம் ரூபாய் வரையில் நகர சபைக்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

முதலாளிமார் சம்மேளனம் விலகியிருப்பது

# தொழிலாளர்களுக்கு பாரிய அநீதி இழைப்பு

■ நதிக தயா பண்டார



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் சம்பளத்தை 1,000 ரூபாயாக அதிகரிப்பது உள்ளிட்ட காரணங்களால் கூட்டொப்பந்தத்தில் இருந்து முதலாளிமார் சம்மேளனம் விலகியிருப்பதால், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாக இலங்கை செங்கொடி சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள அச்சங்கத்தின் ஆலோசகர் மேனகா கந்தசாமி, கூட்டொப்பந்தத்தில் இருந்து முதலாளிமார் சம்மேளனம் விலகியிருப்பதால் நாளாந்தம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை வழங்குதல், ஊழியர் சேமலாப நிதியை செலுத்துதல், மகப்பேறு கொடுப்பனவுகளை வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகள் தற்போது நிறைவேற்றப்படுவதில்லை எனவும் தெரிவித்தார்.

கூட்டு ஒப்பந்தத்திலிருந்து முதலாளிமார் சம்மேளனம் விலகியிருப்பது பாரிய அநீதி எனக் கூறிய அவர், தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காக எதிர்காலத்தில் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

பொதுப்போக்குவரத்தில்

# தடுப்பூசி அட்டை கட்டாயம்



பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் போது தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், கொரோனா வைரஸ் என்பது தொற்றுநோயாகும். இந்த நிலைமை தொடர்பான முடிவுகளை சுகாதார அமைச்சு எடுக்க வேண்டும். அதற்கமைய 3 தடுப்பூசி பெற்றவர்கள் மாத்திரமே பொதுப் போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்ற நடைமுறையை பொது மக்கள் பின்பற்ற வேண்டும் என்றார்.

இது தொடர்பில் எங்களுக்கு கடிதம் மூலம் எதுவும் தெளிவுபடுத்தப்படவில்லை. எனினும் வெளியாகியுள்ள தகவல்களுக்கு அமைய சுற்றறிக்கை வெளியிட்டு எங்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பார்கள்.

அவ்வாறு தகவல் கிடைத்தவுடன் பொதுப் போக்குவரத்தில் தடுப்பூசி அட்டையை சோதிப்பதற்கு ஆலோசனை வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் தெரிவித்துள்ளார்.

தொற்றுக்குள்ளான

# எம்.பிகளின் எண்ணிக்கை 50ஆக அதிகரித்தது

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 50ஆக அதிகரித்துள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவுக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்று (08) உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பெப்ரவரி மாதத்துக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு நேற்று (08) ஆரம்பமான நிலையில், பாராளுமன்ற வளாகத்தில் வைத்து பாராளுமன்ற ஊழியர்கள், பாதுகாப்பு படையினர், ஊடகவியலாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் பாராளுமன்றத்தைச் சேர்ந்த ஊழியர்கள் 24 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இயற்கை உரத்தில் வேளாண்மை செய்து பாதிக்கப்பட்ட

# விவசாயிகளுக்கு நட்டஈடு கிடைக்குமா?

■ வ.திவாகரன்

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மானிய இயற்கை உரத்தில் வேளாண்மை செய்து பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கு, அரசாங்கம் முழுமையான நட்டஈட்டை வழங்குமா என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம் கேள்வியெழுப்பினார்.

அரசாங்கத்தின் கொள்கையான இயற்கை உரத்தைப் பயன்படுத்த வேண்டுமென முன்வைக்கப்பட்ட திட்டத்தை, மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் விருப்பமின்றியே நடைமுறைப்படுத்தினார்கள். தற்போது, அத்திட்டம் விவசாயிகளுக்கு நன்மை அளிக்கவில்லை; ஏமாற்றத்தையே அளித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்கு இது குறித்து மேலும் கருத்துரைத்த



அவர், "இதனால் குத்தகைக்கு காணி எடுத்த விவசாயிகளும், அடிப்படையில் வறுமையான விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

"ஒரு வேளை உணவுக்குக் கூட மற்றவர்களிடம் கையேந்தும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, வட்டிக்குப் பெற்றுக் கொண்ட பணத்தை மீளச் செலுத்த முடியாமலும், நகைகள், கால்நடைகள் என இருந்த மூலதனத்தைக் கூட இழந்தும் அடுத்த போகம் எவ்வாறு வேளாண்மை செய்வதென அறியாது நடுத் தெருவில் நிற்கின்றனர்.

"நீர்பாசன வளங்கள் முழுமையாக இருந்தும் கூட, இயற்கை உரத்தைப் பயன்படுத்தி வேளாண்மை செய்த விவசாயிகள் நட்டப்பட்டதென்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

"பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு முழுமையான நட்டஈட்டை வழங்கினால் மாத்திரமே எதிர்காலத்தில் வேளாண்மை செய்கை பண்ண முடியும். எனவே, கருணை கூர்ந்து, பாதிப்புக்கான முழு நட்டஈட்டையும் வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.







1,400 கிலோ கிராம் எடையுள்ள காளி அம்பாள்

# விக்கிரகம் பிரதிஷ்டை

■ வி.ரி.சகாதேவராஜா

1,400 கிலோ கிராம் எடையுள்ள மாபெரும் காளி அம்பாள் விக்கிரம், கிழக்கின் தென்எல்லையிலுள்ள குமுக்கன் ஆற்றுப்படுக்கையிலுள்ள குமுக்கன் மடத்தடி அம்மன் கோவில் வளாகத்தில் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டுள்ளது.

வன அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பில், அவர்களின் நேரடி வழிகாட்டலில், குமண சரணாலயத்தில் மாபெரும் சக்தி பீடமாக விளங்குகின்ற குமுக்கன் ஆற்றங்கரையின் மடத்தடி அம்மன் கோவிலில், மாபெரும் காளி தேவியின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சித்தர்களின் குரல் அமைப்பின் பிரதானி சிவசங்கர் ஜீ, இதனை பிரதிஷ்டை செய்துவைத்தார்.

அவருக்கு உதவியாக இலங்கையின் சித்தர்களின் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், துணைத் தலைவர் மனோகரன், சிவயோகி மகேஸ்வரன் ஸ்வாமிகள் ஆகியோர் உட்பட பக்தர்கள் செயற்பட்டனர்.

கிழக்கு செயலாளர்

## கடமையை பொறுப்பேற்றார்

■ பைஷல் இஸ்மாயில்

கிழக்கு மாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன கூட்டுறவு அபிவிருத்தி, கூட்டுறவு ஊழியர் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளராக ஐ.கே.ஜீ.முத்துபண்டா, தனது அமைச்சின் கடமைகளை சர்வமத அனுஷ்டானங்களுடன் நேற்று (08) பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ஏ.எல்.எம்.அஸ்மி உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



15 நாள்களாக

## தேடப்பட்டு வந்தவர் சடலமாக மீட்பு

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானை வயல் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் (07) சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் - மயிலங்கரைச்சை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய சீனித்தம்பி யோகராசா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர், 15 நாள்களுக்கு முன்னர் வீட்டை விட்டுச் சென்றதாகவும், அவரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதாகவும் குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். மீட்கப்பட்ட சடலம், பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட

# மேலும் 16 தமிழக மீனவர்கள் கைது

■ எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்கள் 16 பேர், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று முன்தினம் (07) இரவு கைது செய்யப்பட்டதுடன், இவர்களது, மூன்று படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர், இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மூன்று படகுகளையும் அதில் இருந்த 16 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை, மயிலிட்டி மீன்பிடி துறைமுகத்துக்கு கடற்படையினர் அழைத்துச் சென்றுள்ளனர்.

இம் மீனவர்களுக்கு மலேரியா, கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, விசாரணைகளின் பின்னர் நீரியல்வள திணைக்களம் ஊடாக நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.



## கிரவல் அகழ்வு; பைக்கோ சாரதி கைது

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கூழாமுறிப்பு பிரதேசத்தில் அனைத்து திணைக்களங்களின் அனுமதியோடும் வழங்கப்பட்டிருக்கின்ற அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி, முறைகேடாக அளவுக்கு அதிகமான கிரவல் அகழ்ந்து செல்லப்படுகின்றது.

இது தொடர்பாக மக்களால் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வந்தும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலை காணப்பட்டது.

இந்நிலையில், நேற்று முன்தினம் (07) குறித்த பகுதிக்கு மக்களின் முறைப்பாட்டுக்கு அமைய செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவர், இவ்விடத்துக்கு பொலிஸாரை அழைத்துள்ளார்.

அப்பகுதியில் அளவுக்கதிகமான கிரவல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டு, அங்கு வந்த ஒட்டுசுட்டான் பொலிஸாரால் பைக்கோ இயந்திரம் கைப்பற்றப்பட்டு அதனுடைய சாரதியும் கைது செய்யப்பட்டார்.

இந்தக் கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கிய திணைக்களங்கள் ஏன் கண்காணிப்புச் செய்யவில்லை என அப்பகுதி மக்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

அதேவேளை, புவிச் சரிதவியல் திணைக்களம் அவர்கள் வழங்கிய நிபந்தனைகளை பரிசீலித்து நடவடிக்கை மேகொள்ளவேண்டும் என்றும் தனியார் காணியை முறைகேடாக கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கிய அதிகாரிகள் மீது மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



## கோழிக்கூடுக்குள் கசிப்பு தயாரிப்பு

### ஒருவர் கைது

■ என்.ராஜ்

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம், காட்டுப்புலம் பகுதியில் கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்த 32 வயது நபரொருவர், 35 லீட்டர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், வட்டுக்கோட்டை பொலிஸாரும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அந்நபரின் வீட்டுக்கு பின்னால் உள்ள கோழிக்கூடுக்குள் இவ்வாறு கசிப்பு காய்ச்சும் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரை, மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## பூசகரை கடத்தி நகைகள் கொள்ளை

### ஒருவர் கைது

■ எஸ்.தில்லைநாதன்

பூசகர் ஒருவரை கடத்திச் சென்று அவரிடம் இருந்த நகைகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பளை பகுதியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை (06) வீதியோரமாக நின்றிருந்த பூசகரை கடத்திச் சென்று, அவரிடம் இருந்த ஒன்றரை பவுண் தங்கச் சங்கிலி, மோதிரம் என்பன கொள்ளையிடப்பட்டதாக, பருத்தித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், நேற்று முன்தினம் (07) சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்தனர்.

மேலும், சிலர் தலைமறைவாகி உள்ள நிலையில், அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையிலும் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தில்

## கைது செய்யப்பட்ட 8 பேருக்கு பிணை

■ க.அகரன்

கிளைமோர் குண்டுகளைத் தம் வசம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில், பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேருக்கு, வவுனியா நீதிமன்றம், நேற்று முன்தினம் (07) பிணை வழங்கியுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதியன்று, 3 பெண்கள், 5 ஆண்கள் புளியங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பயங்கரவாத தடைச்சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதில் 9ஆவது சந்தேகநபரான ஆனந்தராஜா என்பவர் கைது செய்யப்படாத நிலையில், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி 8 பேருக்கும் ஆதரவாக சி.எச்.ஆர்.டி நிறுவனம் சட்ட உதவியை வழங்கியிருந்தது.

இந் நிறுவனத்தின் ஊடாக, உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கலும் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனை சபை குறித்த விடயம் விசாரணைக்காக பாரப்படுத்தப்பட்டு, விசாரணை நடத்தப்பட்ட நிலையில், பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் பலனாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் 7:1 பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபரால் பிணையில் விடுவிப்பதற்கான சம்மதக் கடிதம், நீதிமன்றத்துக்கு அனுப்பட்டிருந்தது.

இந்நிலையில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் சார்பில் வவுனியா நீதிமன்றத்தில் சட்டத்தரணி செ. கேதீஸ்வரன் ஆஜராகி, குறித்த கடிதம் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பிரகாரம், 8 பேரும், பதில் நீதிபதி க.தயாபரனால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

### எமது கையெழுத்து இயக்கத்தின் வெற்றி

# இராதாவுக்கு விளங்கிவிட்டது

## திலகராஜ் பதிலடி

நுவரெலிய மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் இடம்பெறும் பாரபட்சத்தைச் சுட்டிக் காட்டி, நுவரெலிய மாவட்ட மக்களுக்கு நீதி வேண்டி, மலையக அரசியல் அரங்கம் முன்னெடுத்து வரும் கையெழுத்து இயக்கம் முதற்கட்ட வெற்றியை அடைந்து விட்டது என மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் நுவரெலிய மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.



நுவரெலிய மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான வே. இராதகிருஷ்ணனுக்கு நேற்றுதான் விஷயம் விளங்கி, மாவட்ட அபிவிருத்தி குழுவில் பேசியிருப்பதன் மூலம் எமது வெற்றி உறுதி செய்யப்பட்டு இருக்கிறது என்றார்.

கிளிநொச்சி மாவட்டம் விஸ்வமடு பிரதேசத்தில் இடம்பெற்ற மலையக அரசியல் அரங்கத்தின் கையெழுத்து இயக்கத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், எமது கையெழுத்து இயக்கம் முதல் கட்ட வெற்றியைப் பெற்றிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராதா கிருஷ்ணனுக்கு எமது கையெழுத்து இயக்கம் குறித்த தகவல் தெரிந்து இருக்கிறது என்பது அவரது செய்தி அறிக்கையிலே தெரிகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பாராளுமன்ற உறுப்பினராக பேசியிருக்க வேண்டிய விடயத்தை, இப்போதுதான் இராதாகிருஷ்ணன் தெரிந்து கொண்டுள்ளார் என்பது, எமது அரங்கத்தின் செயற்பாடுகளுக்கு கிடைத்த முதல் வெற்றியாகும்.

கையெழுத்து இயக்கம் எதுவும் இதுவரை நுவரெலியாவில் வெற்றி பெற்றதில்லை எனவும் கூறியுள்ளார். இதற்கு முன்னர் எதற்காக அவர் நுவரெலிய மாவட்டத்தில் கையெழுத்து சேகரித்தார் என்பதுவும் அதனால் அவருக்கு கிடைக்காமல் போனது என்ன, என்பது பற்றி நாம் அறியோம். ஆனால், நாங்கள் வடக்கு வந்து கையெழுத்து இயக்கம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மாதா மாதம் வடக்கு வந்து கையெழுத்து இட்டு வென்ற விடயம் என்னவென்பதை உலகமே அறியும் என்றார்.

### தொழில் நீதிமன்றத்தை

# ஹப்புத்தளையில் அமைக்கவும்

## அரவிந்தகுமார் எம்.பி கோரிக்கை

■ எம். செல்வராஜா



பதுளை மாவட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நன்மை கருதி, தொழில் நீதிமன்றமொன்றை ஹப்புத்தளையில் அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மடுல்சீமை, லுணுகலை, கந்தகெட்டிய, எல்ல, பள்ளக்கட்டுவை ஆகிய பிரதேசங்களில் நடமாடும் தொழில் நீதிமன்றங்களை இயங்க வைக்கவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார், நீதி அமைச்சின் பிரதம செயலாளருக்கு அனுப்பியுள்ள அவசரக் கடிதமொன்றிலேயே, மேற்கண்ட கோரிக்கைகளை விடுத்துள்ளார்.

பதுளை மாவட்டத்தில் பதுளை, பண்டாரவளை ஆகிய இடங்களில் தொழில் நீதிமன்றங்கள் காணப்படுகின்றன. இந் நீதிமன்றங்களில் தொழில் வழக்குக் கோவைகள் நிறைந்து காணப்படுவதால், வழக்குகள் நிறைவுக்கு கொண்டுவருவதற்கு கால தாமதங்கள் ஏற்படுகின்றன. இதனால் வழக்குத் தொடுநர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர்.

ஆகவே, இந்தக்கால தாமதங்களைத் தவிர்க்கும் முகமாக, ஹப்புத்தளையில் தொழில் நீதிமன்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டியது, அவசியமாகுமென அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### சிவனைத் தரிசிப்பவர்கள்

# நீராட வேண்டாம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

சிவனொளிபாதமலை யாத்திரைக்கு வருபவர்கள், நீர் நிலைகளில் நீராடுவதைத் தவிர்க்குமாறு, ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி விஜித்த அல்விஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காசல்றீ மற்றும் மவுசாக்கலை உள்ளிட்ட பல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து நீர்த்தேக்கங்களில் சேறு படிந்துள்ளது. இவ்வாறான நிலையில், நீராடும் போது ஆபத்தை விளைவிக்கும் என்றார்.

அத்துடன் மகாவலி கங்கை, களனி கங்கை என்பவற்றில் நீராடச் செல்லும் யாத்திரிகர்கள், நீராடுவதற்கு உகந்த இடம் குறித்து சரியாகத் தெரிந்துகொண்டதன் பின்னர், அங்கு நீராடுவது சிறந்த விடயம் என்றும் தெரிவித்துள்ளார்.





# திறப்பு விழா...

மஹியங்கனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட தம்பகொல்ல ஸ்ரீ சுமண வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை கட்டடத் திறப்பு விழா, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் நடைபெற்றது. (பதுளை நிருபர்கள்)





# பஸ்ஸிலிருந்து தவறி விழுந்த கர்ப்பிணி

■ இரா.யோகேசன்

நாவலப்பிட்டியிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸிலிருந்து கர்ப்பிணி ஒருவர் தவறி விழுந்த சம்பவமொன்று வட்டவளையில் நேற்று (08) காலை இடம்பெற்றுள்ளது.

வட்டவளை பஸ் தரிப்பிடத்தில் பயணிகளை இறக்கும் போதே, குறித்த கர்ப்பிணி தவறி விழுந்துள்ளார். பொதுமக்களின் உதவியுடன் வட்டவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### கித்துல் உணவுப் பொருட்கள்

# ஆளுநரிடம் கையளிப்பு




■ சிவாணி ஸ்ரீ

கித்துல் மூலம் தயாரிக்கப்பட்ட பல்வேறு உணவுப் பொருட்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு, இரத்தினபுரியில் இடம்பெற்றது.

இரத்தினபுரி, ஏரத்ன பிரதேசத்தைச் சேர்ந்த லஹிரு தில்ஷான் என்பவரால் தயாரிக்கப்பட்ட, கித்துல் பட்டர், கித்துல் பாணி உட்பட பல்வேறு உணவு பொருட்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு, சப்ரகமுவ மாகாண சபை கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் (07) நடைபெற்றது.

குறிப்பிட்ட உணவு பொருட்கள், லஹிரு தில்ஷானால், சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவிடம் கையளிக்கப்பட்டன.

### சுவித்ரா கணேசன்

# சிறப்பு பாராட்டைப் பெற்றார்

■ மெய்யன்



புசல்லாவை இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி கற்கும் சுவித்ரா கணேசன், ஊக்கமூட்டும் பேச்சுப் போட்டியில் பங்குபற்றி சிறப்பு பாராட்டினைப் பெற்றுக்கொண்டார்.

'நாங்களே நாளைய பாதுகாவலர்கள்' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மன்றக் கல்லூரியால் நடத்தப்பட்ட போட்டியிலேயே இவர் கலந்துகொண்டு பாராட்டைப் பெற்றுள்ளார்.

இதற்கான வழிகாட்டியாக வகுப்பாசிரியர் ரவீந்திரகுமார் திகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாத்தளையில் தொற்றின் வேகம் அதிகரிப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாவட்டத்தில் கொரோனா தொற்றின் வேகம் மீண்டும் அதிகரித்து வரும் நிலையில், பூஸ்டர் தடுப்பூசியை விரைவாக செலுத்திக்கொள்ளுமாறு மாத்தளை மாவட்ட சுகாதாரப் பிரிவினர் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதற்கமைய இந்த மாதத்தின் முதல் ஆறு நாள்களுக்குள் 5 தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர். இதில் நால்வர் மூன்றாவது தடுப்பூசியான பூஸ்டரை செலுத்திக்கொள்ளாதவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்த மாதம் ஆரம்பப் பகுதியில் ஒட்சிஜன் தேவையுடைய எந்தவொரு தொற்றாளரும் மாத்தளை மாவட்டத்தில் காணப்படாத நிலையில், கடந்த இரண்டு நாள்களில் ஒட்சிஜன் தேவைப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை பத்தாக அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மலையகத்தில் குடிநீருக்குத் தட்டுப்பாடு

## எதிர்வரும் நாள்களில் இன்னும் அதிகரிக்கலாம்

■ இரா.யோகேசன்



மலையகத்தின் சில பிரதேசங்களில் குடிநீருக்குத் தட்டுபாடு நிலவுவதால் மக்கள் சிரமத்தை சந்திப்பதாக கவலை தெரிவிக்கின்றனர். இதனால் தாம் நாளாந்தம் மேற்கொள்ளும் பணிகளுக்கும் இடையூறு ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

தற்போது மலையகத்தில் வரட்சியான வானிலை நிலவுவதால் ஆறுகளிலும் நீரோடைகளிலும் நீர் குறைவடைந்து செல்வதுடன் காடுகளுக்கு தீவைப்பு சம்பவங்களும் அதிகரித்துள்ளமையால் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்ள நீர் உள்ள பிரதேசங்களுக்கு தேடிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தொடர்ச்சியாக வரட்சியான வானிலை நிலவுமாக இருந்தால் எதிர் வரும் வாரங்களில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு சாத்தியப்பாடு நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### ருவன்வெலயில் வெறுப்பு பேச்சுகளை

# தடுப்பதற்கான செயலமர்வு

■ என்.ஆராச்சி

வெறுப்பு பேச்சுகளைத் தடுத்தல் தொடர்பான செயலமர்வு, இன்று (9) ருவன்வெல, ராஜகிரிய ஹோட்டலில் நடைபெறவுள்ளது என, கேகாலை மாவட்ட சர்வமத குழுவின் தலைவர் கே. கஸ்தூரி ஆராச்சி தெரிவித்துள்ளார்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் ருவன்வெல, தெஹியோவிட்ட, எட்டியாந்தோட்டை, தெரணியகல ஆகிய பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், முன்னாள் சப்ரகமுவ மாகாண சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட 60க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்றார்.

கேகாலை மாவட்ட சர்வமத குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தச் செயலமர்வில், தெளிவுப்படுத்தல் விடயங்களை அரச அதிகாரிகளும் சர்வமத சபையின் உறுப்பினர்களும் முன்னெடுக்கவுள்ளனர்.

# தாளத்துக்கு ஆடுவதை அரசாங்கத்தால் தவிர்க்க முடியாது

வீட்டில் பெற்றோர் இருக்கும் போது, எவ்வாறான குழப்படிகளைச் செய்தாலும் பரவாயில்லை; பெற்றோர் இல்லாத தருணங்களில் மிகக் கவனமாகவே இருக்கவேண்டுமென்ற முன்னோரின் அறிவுரை, பலருக்கு ஞாபகத்தில் இருக்கும்.

பெற்றோர் வீட்டில் இருக்கும் போது, சிறுசிறு விபத்துகள் ஏற்படுமாயின் அவசர சிகிச்சையளித்துக் காப்பாற்றிவிடுவர். பெற்றோர் இல்லாத நேரங்களில் விபரீதங்கள் ஏற்பட்டால், இறுதியில் மரணத்தை தழுவும் நிலைமையும் ஏற்படும். ஆக, வீட்டை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு பெற்றோருக்கே உண்டு.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், 'நிர்வாகம் ஒன்று இருக்கிறதா' எனும் சந்தேகத்தை, அன்றாடம் இடம்பெறும் சம்பவங்கள் உறுதிப்படுத்திக்கொண்டே இருக்கின்றன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளுக்கு கட்டுப்பாடு இல்லை; ஒவ்வொரு வர்த்தகரும் தாங்கள் நினைத்தால் போல் விலைகளைத் தீர்மானிக்கின்றனர். தரக்குறைவான பொருட்கள் மலிந்து கிடக்கின்றன.

தரம், விலை நிர்ணயம் உள்ளிட்டவற்றில் கடுமையாக இருந்து, நுகர்வோரைப் பாதுகாக்கவேண்டிய நுகர்வோர் அதிகார சபை, இன்னும் தூங்கிக்கொண்டிருப்பதும் வெட்கக்கேடான விடயமாகும். அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும், தரக்குறைவாக பொருட்கள் விற்பனையும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

சில வீடுகளில், ஒருநேரத்தில் சமைத்துவைத்து, மூவேளைகளும் உண்பர். தற்போதைய நிலையில், காலையில் சமைத்த சோற்றை, பகலில் உண்ணமுடிவதில்லை. ஒரு வகையான வழுவழுப்புத் தன்மையுடன் நீர்கோர்த்து விடுகின்றது. நாட்டில் நிலவும் கடும் வெயிலுடன் கூடிய வானிலையால், இவ்வாறு சோறு கெட்டுப்போயிருக்கலாமென, ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்கள் ஆறுதல் கூறிக்கொள்வர்.

ஆனால், சந்தைகளில் கிடைக்கும் சில வகையான அரிசி, தரமற்றதாக இருப்பதால், மூவேளைகளும் வைத்து உண்ண முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. வாயைப் பிளந்துகொண்டிருக்கும் 'முதலை'களை, நுகர்வோர் அதிகார சபையினர் வலைவீசிப் பிடித்திருந்தால், தரமான, நிர்ணயவிலையில் பொருட்களை, நுகர்வோர் கொள்வனவு செய்திருப்பர்.

பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டுமாயின், நுகர்வோர் அதிகார சபைக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். அதன்பின்னர், வாழ்க்கைச் செலவு குழுவில் கலந்துரையாடப்படும். ஏதுவான காரணங்கள் இருந்தால் மட்டுமே, நுகர்வோரும் பாதிக்காத வகையில், விலை அதிகரிப்புக்கு அனுமதியளிக்கப்படும்.

தற்போதைய நிலைமையில், இவ்வாறான முறைமையொன்று பின்பற்றப்படுகின்றதா என்பதே தெரியாமல் இருக்கின்றது. இறுதியில், இந்திய எண்ணெய் நிறுவனமான ஐ.ஓ.சி, தான் நினைத்தாற்போல, எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துக் கொண்டுள்ளது.

மின்னுற்பத்திக்காகத் தங்களிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு, அரசாங்கம் மறுத்துவிட்டது என்றும், அதனாலே, எரிபொருளை ஐ.ஓ.சி அதிகரித்துவிட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. நெருக்கடியில் இருக்கும் போது துன்புறுத்தக்கூடாது. அதேபோல, கடனைப் பெற்றுக்கொண்டால், அந்நிறுவனத்தின் தாளத்துக்கே ஆடவேண்டும்.

முறையான நிர்வாகமொன்று இன்மையால், போடும் தாளத்துக்கெல்லாம் ஆடவேண்டிய நிலைமையிலேயே இவ்வரசாங்கம் இருக்கிறது. இதன் பெறுபேற்றையெல்லாம் சாதாரண மக்களே அனுபவிக்கின்றார்கள் என்பதே கவலையாகும்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவர் தன்னைத்தான் சீராக, நல்லவராக உருவாக்கத் தன்னைத்தான் நீதிபதியாக மாற்ற வேண்டும்.

நான் உண்மையுள்ளவனாக இருக்கின்றேனா? அன்பை சகல உயிர்களுக்கும் வழங்குகின்றேனா என்பதுடன் கோபம், குரோதம், பொறாமை, பேராசை, சண்டித்தனம், சட்டத்துக்குப் புறம்பான செயல்கள், பிறரைத் துன்பத்துக்குள்ளாக்கி அவமானப்படுத்தல், பொதுச் சேவைகளை ஆதரிக்காமை, உடலை வருத்தி உழைக்காமை எனக் காலத்தைக் கழிப்பவர்கள், தன்னைத்தான் தட்டிக் கேட்கவேண்டும்.

தவறுகளைத் தெரிந்தும் தெரியாமல் செய்துவிட்டு, அப்பாவிகளாக நடிப்பவர்களே பெரும்பாலானவர்களாக இருக்கின்றார்கள். பலவீனம் புதிதல்ல; ஆனால், பலவீனத்தை அழித்திட முடியும்.

காலத்தை மதித்து, காரியங்களைக் கச்சிதமாக நிறைவேற்ற வேண்டும். இன்றைய பொழுது எமக்கானது. அதுவே உலகுக்கானது. பிறரிடமிருந்து பெறுவதை விடுத்து, வழங்குவதில் முதல்வனாக இருக்க வேண்டும். தலைமைப் பதவியைவிட, தொண்டனாக இருந்து சேவை செய்தலே மேலானது.

குறைகளைத் துருவித்துருவி ஆராயாது, நல்லதை மட்டும் தேடிப் பெறுக. உலகம் மதிப்பான மாந்தர்களைத் தேடிக்கொண்டிருக்கின்றது. உணர்க!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

சுதந்திரத்துக்கு வயது 74: திரும்பிப் பாரத்தால்

# தேசிய ஒற்றுமையைக் காணோம்



எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கையின் சனத்தொகையில் பெரும்பாலானவர்கள், இலங்கையை ஒரு சுதந்திர நாடாக ஏற்றுக் கொள்கிறார்கள் இல்லைப் போலும்! இலங்கையில் வெளியாகும் பத்திரிகைகளைப் பார்க்கும் போது, அவ்வாறுதான் சிந்திக்கத் தோன்றுகிறது.

பேரினவாதத்தால் பல்வேறு விதமாகப் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினர், குறிப்பாகத் தமிழ் மக்கள், தாம் இரண்டாந்தரப் பிரஜைகளாக மதிக்கப்படுவதாகவும் அதனால் கொண்டாடக்கூடிய சுதந்திரம் நாட்டில் இல்லை என்றும் நீண்ட காலமாகக் கூறி வருகின்றனர்.

ஆனால், பெரும்பான்மை இனத்தவர்களும் வேறு காரணங்களுக்காக நாட்டில் சுதந்திரம் இல்லை என்று கருதுவதாகவே, சிங்கள மற்றும் ஆங்கில பத்திரிகைகளில், சிங்கள மக்கள் தெரிவிக்கும் கருத்துகளையும் கேலிச்சித்திரங்களையும் அவர்களின் சமூக வலைத்தள பதிவுகளையும் பார்க்கும் போது தெரிகிறது.

பொதுவாக, பிரிட்டனின் ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரம் அடைந்தமையால், நாடு பெரும் நன்மை அடைந்துள்ளது என்ற கருத்தைத் தெரிவித்தும், அதற்காகப் பாடுபட்ட அரசியல் தலைவர்களைப் பாராட்டியுமே அண்மைக் காலம் வரை, பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளியாகின.

ஆனால், இப்போது நாடு சுதந்திரம் அடைந்ததை அடுத்து, இந்நாட்டுத் தலைவர்களின் கீழ், நாடு எவ்வாறு சீரழிந்துள்ளது என்பதையே பெரும்பாலான கட்டுரையாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வருட சுதந்திர தினத்தையொட்டிய கட்டுரைகளில் பெரும்பாலானவை, அது போன்ற கருத்துகளையே முன்வைத்திருந்தன.

உண்மை தான்! ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து நாடு சுதந்திரமடைந்து, 74 ஆண்டுகள் சென்றுள்ள நிலையில், இலங்கை ஏறத்தாழ வங்குரோத்து அடைந்த நாடாகவே இருக்கிறது. கூலி வேலை செய்து வாழும் ஏழைகளைப் போல், அன்றாடம் ஏதாவது தேடிச் சாப்பிடும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. "ஒரு வாரத்துக்குத் தான் எண்ணெய் இருக்கிறது"; "10 நாள்களுக்குத் தான் மின்சாரத்தை வழங்க முடியும்" என்று அமைச்சர்கள் கூறுவதை, இந்நாள்களில் அடிக்கடி கேட்கிறோம்; பார்க்கிறோம்.

மாபெரும் வெளிநாட்டு செலாவணி பிரச்சினையை, நாடு எதிர்நோக்கி இருப்பதன் காரணமாக, அடுத்த இரண்டொரு மாதங்களில் எவ்வாறு உணவுப் பிரச்சினையை, நாடு எதிர்நோக்கப் போகிறது என்பதை, நாட்டில் சிறந்த பொருளியல் நிபுணர்களாலும் கூற முடியவில்லை. சுதந்திரம் அடையும் போது, செலவை விட வரவு அதிகமாக இருந்த நாடாக, இலங்கை இருந்தமையை இங்கு சுட்டிக்காட்டல் தகும்.

சுதந்திரத்தை முறையாகப் பாவித்து, நாட்டு வளங்களை முறையாகப் பயன்படுத்தி, மக்களின் வாழ்க்கையை வளம்பெறச் செய்ய, சுதந்திரத்தின் பின்னர் அடுத்தடுத்து அதிகாரத்துக்கு வந்த தலைவர்களால் முடியாமல் போய்விட்டது. ஆனால், சுதந்திர தினம் என்பது நாட்டில் முக்கியமானதொரு தினம் என்பதில் சந்தேகம் இல்லை. நாம், சுதந்திரத்தின் பின்னர் நாளுக்கு நாள் அதள பாதாளத்துக்குள் வீழ்ந்தமை உண்மையாயினும், அதற்குக் காரணம் சுதந்திரம் அல்ல.

எனவே, சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதில் தவறில்லை. ஆனால், வெளிநாடுகளிடம் கையேந்தி, எண்ணெய்யைக் கடனுக்குப் பெற்று, அதை பாவித்து வான் சாகசங்களை நடத்துவதானது அல்லது, ஏதோ நாம் பாரிய ஆயுத பலத்தைக் கொண்ட நாட்டைப் போல் ஆயுதப் பலத்தை காட்ட, கடனுக்குப் பெற்ற எண்ணெய்யைப் பாவித்து, இராணுவ கனரக ஆயுதங்கள் தாங்கிய வாகன பவனி நடத்துவதானது அறிவின்மையேயன்றி வேறொன்றுமில்லை.

'நாம் சுதந்திரமடைந்தோம்' என்று கொண்டாட்டங்களை நடத்துகிறோம். ஆனால், பரஸ்பரம் முரண்பட்ட அரசியல், பொருளாதார நோக்கங்களைக் கொண்ட பலம் வாய்ந்த நாடுகள், எமது நாட்டு வளங்களை பங்கு போட்டுக்கொள்ள நாட்டுக்குள்ளேயே போட்டி போடுகின்றன. அந்தப் போட்டியின் போது, எமது அரசாங்கத்தின் மீது கடும் அழுத்தங்களைச் செலுத்துகின்றன. 'அவருக்குக் கொடுத்தால் எனக்கும் கொடு' என்று வற்புறுத்துகின்றன. 'முடியாது' என்று வாய் திறந்து கூற முடியாத அளவுக்கு, நாம் அவர்களுக்கு பல்வேறு விதமாகக் கடமைப்பட்டுள்ளோம்.

சுதந்திரத்தை அடைவதற்காக, இந்நாட்டில் வாழும் சகல சமூகங்களும் உழைத்ததாக அரசியல்வாதிகள் கூறுகின்றனர். ஆனால், அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்களும் இனங்களின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, நாட்டு மக்கள் இன ரீதியாகப் பிரிந்து வாழவும் சிந்திக்கவும் முற்பட்டுள்ளனர்.

முதலாவது, சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் போது, தமிழில் தேசிய கீதத்தைக் கேட்க பக்குவமடைந்து இருந்தவர்கள், இன்று அதற்குத் தயாராக இல்லை. அதன் மூலம், தேசிய கீதத்துக்கும் இந்த நாட்டுக்கும் நாமும் சொந்தக்காரர்கள் என்ற எண்ணம், சிறுபான்மை மக்களின் மனதில் தோன்றுவதை அவர்கள் தடுத்து வருகிறார்கள்.

இன்று மிகச் சிலரைத் தவிர, பொதுவாகத் தமிழர்கள் சுதந்திர தினத்தை கொண்டாடத் தயாரில்லை. கொண்டாடுவோரும் ஒன்றில் தனிப்பட்ட காரணங்களுக்காக, ஆளும் கட்சியினரோடு இணைந்து இருக்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்கிறார்கள். அல்லது, அயலவலர்களான பெரும்பான்மை இனத்தவர்களைப் பகைத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காக, தேசிய கொடியை தமது வீடுகளில், வளவுகளில் சிலர் பறக்க விடுகின்றனர். மற்றவர்கள், தம்மில் ஒருவர் தேசிய கொடியை பறக்கவிட்டால், அது, தமது இனத்துக்குச் செய்த அவமானமாகக் கருதுகின்றனர். அரசாங்கங்கள், சுதந்திரத் தினத்தை கொண்டாட முற்படும் போதெல்லாம், தாம் இந்நாட்டிலேயே அந்நியராகி விடடோம் என்று அவர்கள் உணர்கிறார்கள். எனவே, அவர்களில் சிலர், இந்த நாளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த முற்படுகின்றனர். இந்த ஆழமான மானசீகப் பிளவானது, சுதந்திர தினத்தின் அர்த்தத்தையே கேள்விக்குறியாக்கி விடுகிறது. கடந்த 74 ஆண்டுகளில், இந்நாடு அடைந்த மிகப் பாரதூரமான தோல்வி, இந்த மானசீகப் பிளவாகும்.

1948ஆம் ஆண்டிலிருந்து, சுமார் இரண்டு தசாப்தங்கள் வரை, நாட்டின் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் அங்கிகாரத்தைப் பெருமளவில் பெற்றிருந்தன. தமிழீழ விடுதலை புலிகளால், 1975ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட ஸ்ரீ ல. சு. கவைச் சேர்ந்த அல்பிரட் துரையப்பா, யாழ்ப்பான நகர மேயராக இருந்தமை அதற்குச் சிறந்த உதாரணமாகும். ஆனால், அதன் பின்னர் நிலைமை மிக வேகமாக மாறியது.

1976ஆம் ஆண்டு தனித் தமிழ் நாட்டுக்கான வட்டுக்கோட்டை பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் பின்னர், 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், தமிழர் விடுதலை கூட்டணி, வடக்கு, கிழக்கில் மாபெரும் சக்தியாக மாறியது.

இந்தியாவின் பூகோள அரசியல் பார்வையில், இலங்கையில் தனித் தமிழ் நாடு என்பது சாத்தியமற்ற கோரிக்கையாக அமைந்தாலும், அது திடீரென வானிலிருந்து வீழ்ந்த கோரிக்கையல்ல. அதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. எனினும் அதனை முன்வைத்து, தமிழ் ஆயுத குழுக்கள் போராட முற்பட்டதை அடுத்து, இனங்களிடையேயான துருவமயமாக்கல் வேகமாகியது. வடக்கிலும் தெற்கிலும் அரசியல்வாதிகள், இன உணர்வை மென்மேலும் அரசியல் மூலதனமாக்கிக் கொண்டமையே அதற்குக் காரணமாகியது.

முப்பது ஆண்டுகளுக்கு மேல் நீடித்த போருக்குப் பின்னர், தமிழ் மக்கள் ஏறத்தாழ முழுமையாகவே தேசிய அரசியலில் இருந்து அந்நியப்பட்டுவிட்டனர். தேசிய கீதம், தேசிய கொடி ஆகியவை தமது தேசிய கொடியாகவோ தேசிய கீதமாகவோ அவர்களில் பெரும்பாலானவர்கள் உணரவில்லை. தேசிய அரசியலில் இருந்து துண்டிக்கப்பட்டவர்களைப் போல், அவர்களது அரசியல் அமைந்தது. 1980களுக்குப் பின்னர், நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகள் அதனையே பறைசாற்றுகின்றன.

போரின் போது, போரில் ஈடுபட்ட இருசாராராலும் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாண முஸ்லிம்களும் அத்தோடு, அரசியல் ரீதியாகத் தனியாகச் சிந்திக்க முற்பட்டனர். அதன் விளைவே, முஸ்லிம் அரசியல் கட்சிகளாகும். விகிதாசார தேர்தல் முறை காரணமாக, அரசியல்வாதிகள் தமது இனத்தவர்களையும் சாதியினரையும் தேடிச் செல்லும் நிலைமை உருவாகவே, இந்த இனத் துருவமயமாக்கல் மேலும் விரிவடைந்து வருகிறது. அரசாங்கங்களுக்கோ அரசியல் கட்சிகளுக்கோ, இந்த நிலைமையை சீர் செய்ய இன்னமும் தேவை ஏற்படவில்லை.

போரின் போது மனித உரிமை மீறல்கள் மிக மோசமாகவும் பரவலாகவும் இடம்பெற்றன. 2014ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையொன்றின் அறிக்கையில், இதற்காக ஆயுதப் படைகளும் புலிகளும் மிகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது ஒவ்வொரு வருடமும் முதல் மூன்று மாதங்களில் அரச தலைவர்களும் தமிழ் தலைவர்களும் மனித உரிமைகள் பிரச்சினையை முன்வைத்து, சர்வதேசத்தை அணுகுகின்றனர். அதன் மூலமும் ஒவ்வொரு வருடமும் பழைய காயங்கள் கிளறப்படுகின்றன. முறையான விசாரணையொன்றை நடத்தி, இதற்குத் தீர்வு காண அரசாங்கம் தயாராகவும் இல்லை.

இரண்டு சந்தர்ப்பங்களில் தவிர, இந்த விடயத்தில் தமது புறத்தில் இடம்பெற்ற குற்றங்களை ஏற்கும் மனப்பான்மை எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் 21 ஆவது ஞாபகார்த்தமாக 2004ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டமொன்றின் போது, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டார். மேற்படி, மனித உரிமைகள் பேரவையின் விசாரணையை அடுத்து, தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், தமிழரின் பெயரால் இடம்பெற்ற குற்றங்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றார். ஆனால், அவர்களும் பின்னர் அதனை மறந்துவிட்டனர்.

## கடிதங்கள்

### ஜெயபுரம் அரைக்கும் ஆலை குறித்து தீர்க்கமான முடிவு தேவை

கிளிநொச்சி, ஜெயபுரம் தெற்கில் நிர்மாணிக்கப்பட்டு, மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் வழங்கப்பட்ட அரைக்கும் ஆலை, எந்தவித செயற்பாடுகளும் இன்றி மூடிய நிலையில் காணப்படுவது தொடர்பாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஜெயபுரம் தெற்கு பகுதியில், அரச சார்பற்ற நிறுவன நிதி உதவியுடன், வடமாகாணத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடியேறியுள்ள நலிவுற்ற மக்களின் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பலும், உணவுப் பாதுகாப்பினை அதிகரித்தலும் என்னும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு, 2013ஆம் ஆண்டு ஜெயபுரம் தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்திடம் வழங்கப்பட்ட அரைக்கும் ஆலை, இயங்காமல் மூடிய நிலையில் காணப்படுகின்றது.

கிராம மட்ட அமைப்புகளை வலுப்படுத்தும் வகையில் நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்ட குறித்த அரைக்கும் ஆலையானது, தற்போது இயங்காத நிலையில் காணப்படுவதற்கான காரணம், வருமானம் இன்மை என ஜெயபுரம் தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் தெரிவிக்கின்றது. இருந்தபோதிலும், இதை இயங்க வைப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்; அல்லது, வேறுவழிகளில் பிரதேச மக்களுக்கு நன்மை தரக்கூடிய மாற்றுவழிகள் குறித்து சிந்திக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-யது பாஸ்கரன்




# அமைச்சரவை தீர்மானங்கள் சில

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்றுமுன்தினம் (07) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### 01. ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்

நோய் எதிர்ப்பியல் தொடர்பான ஐக்கிய அமெரிக்காவின் லா ஜொல்லா ( La Jolla ) நிறுவனம் மற்றும் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் கற்கை ஒத்துழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆய்வுக் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பு நிதியாக இதுவரை 505,840 அமெரிக்க டொலர்கள் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்திற்கு கிடைத்துள்ளது. காச நோயை ஆரம்பகட்டத்திலேயே இனங்காணல், புரிந்து கொள்ளல் மற்றும் குறைத்துக் கொள்வதற்கான ஆய்வு நடவடிக்கைகளை ஊக்குவித்தல் மற்றும் மாணவர்கள் மற்றும் கல்விக் குழுவினரைப் பரிமாற்றம் செய்து தற்போது காணப்படும் கற்கை ஒத்துழைப்புக்களை மேலும் அதிகரித்துக் கொள்வதற்கு இருதரப்பினரும் உடன்பாடொன்றை எட்டியுள்ளனர்.

அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக நிதியளிப்பு ஒப்பந்தம் மற்றும் பொருட்கள் பரிமாற்ற ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 02. டிஜிட்டல் தனித்துவச் சட்டகம்

இலங்கைக்கான ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவச் சட்டகத்தை நிறுவுதலை தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமாக முன்னுரிமை வழங்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உயிரியல் அளவீட்டுத் தரவுகளின் அடிப்படையில் தனிநபர் அடையாளத்தை உறுதிப்படுத்தும் உபகரணம், இணையவெளியில் தனிநபர்களின் தனித்துவ அடையாளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய டிஜிட்டல் கருவி மற்றும் குறித்த இரண்டு கருவிகளையும் தொடர்புபடுத்துவதன் மூலம் டிஜிட்டல் மற்றும் பௌதீகச் சூழலில் தனிநபர் அடையாளத்தை திட்டவட்டமாக உறுதிப்படுத்தக் கூடிய அடையாளங் காணல் முன்மொழியப்பட்டுள்ள ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவச் சட்டகத்தின் கீழ் அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் ஒருங்கிணைந்த டிஜிட்டல் தனித்துவச் சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது.

### 03. சேதன உரத் தயாரிப்பு நிலையம்

மொரகஹகந்த, களுகங்கை மகாவலி 'எல்ப்' வலயம் சேதன விவசாய உற்பத்திகளை மேற்கொள்கின்ற நிலைபேறான வலயமாக இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. நஞ்சற்ற சேதன உள்ளீடுகளைப் பயன்படுத்தி விவசாயப் பயிரிடல் மூலம் விவசாய சமூகத்தின் வருமானங்களை அதிகரிப்பதற்கும், சேதன விவசாயம் தொடர்பாக உயர் திறன்களுடன் கூடிய விவசாய சமூகத்தவர்களின் பங்களிப்புடன், தேசிய சேதன விவசாயப் பயிர் உற்பத்திகளின் இலக்கை அடைவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்டகாலமாகப் பயிரிடுவதற்குத் தேவையான சேதனப் பசளையைக் குறித்த பிரதேசத்திலேயே உற்பத்தி செய்துகொள்ளும் நோக்கில் சேதன உர நிலையங்கள் இரண்டும் தேவையான ஆய்வுகூட வசதிகளுடன் வெல்லேவெல மற்றும் குருவெல போன்ற மகாவலிப் பிரிவுகளில் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்டமாக வெல்லேவெல சேதன உர உற்பத்தி நிலையத்தை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதன்மூலம் வருடாந்தம் 2,000 மெற்றிக்தொன் சேதன உரத்தைத் தயாரிக்க முடியுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சேதன உர நிலையத்தை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை நேரடி ஒப்பந்தமாக பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு ஒப்படைப்பதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. முதலீட்டுப் பிணக்குகள் தொடர்பான மேல் நீதிமன்ற சட்டம்

இலங்கையில் முதலீடுகளுக்கு நட்புறவுமிக்க சட்ட ரீதியான சூழலை ஏற்படுத்த வேண்டிய சட்ட மறுசீரமைப்புக்களை சமர்ப்பிப்பதற்காக நீதி அமைச்சின் விசேட அலகொன்றின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக சட்ட மறுசீரமைப்பு உபகுழுவுக்கு நீதி அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதற்கமைய, குறித்த குழுவானது 100 மில்லியன் ரூபாய் அல்லது அதற்கு அதிகமான முதலீடுகளில் மேலெழுகின்ற, 50 மில்லியன் ரூபாய் நிதி வரையறை கொண்ட 'பிணக்குகள்' தொடர்பாக வழக்கு விசாரணை செய்து தீர்மானிக்கக் கூடிய நீதிமன்ற அதிகாரத்துடன் கூடிய முதலீட்டுப் பிணக்குகள் தொடர்பான மேல் நீதிமன்றத்தை நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக ஏற்பாடுகளை உள்வாங்கி சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 05. புதிய இசைவுத் தீர்ப்பு ( Arbitration ) சட்டத்தை அறிமுகப்படுத்தல்

இலங்கையில் இசைவுத் தீர்ப்பு விடயங்கள் பற்றி ஆராய்ந்து புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை, நீதி அமைச்சின் விசேட அலகொன்றின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள வர்த்தக சட்ட மறுசீரமைப்பு உபகுழுவால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையில் பாரியளவிலான உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கக் கூடிய வகையிலான இசைவுத் தீர்ப்புக் கட்டத்திலேயோ அல்லது இசைவுத்தீர்ப்பு அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் கட்டத்திலேயோ சமகாலத்தில் காணப்படும் தடைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான ஏற்பாடுகள் முன்மொழியப்பட்டுள்ள சட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இசைவுத்தீர்ப்புச் சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 06. கல்வியமைச்சரின் யோசனைக்கு அங்கிகாரம்

அதிபர், ஆசிரியர் சம்பள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல் தொடர்பான அமைச்சரவை தீர்மானத்திற்கமைய வெளியிடப்பட்டுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2016( IV) இல் ஏற்பாடுகளை பிரிவெனா ஆசிரியர்கள், அரச அங்கிகாரம் பெற்ற தனியார் பாடசாலை ஆசிரியர்கள், அங்கிகரிக்கப்பட்ட விசேட உதவிப் பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏற்புடையதாக்கிக் கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

பெங்களூரு

## கல்லூரிகளுக்கு விடுமுறை:

# 'பர்தா' விவகாரத்தால் கர்நாடகாவில் பதற்றம்



கர்நாடகாவில் முஸ்லிம் மாணவியர், கல்லூரிக்கு 'பர்தா' அணிந்து வரும் விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. பதற்றமான சூழல் நிலவுவதை அடுத்து, இரண்டு கல்லூரிகள் நேற்று முன்தினம் (07) விடுமுறை அறிவித்தன.

கர்நாடகாவில் உடுப்பி அரசு மகளிர் கல்லூரியில், பர்தா அணிந்து வந்த ஆறு முஸ்லிம் மாணவியரை வகுப்பறைக்கு செல்ல கல்லூரி நிர்வாகம் தடை விதித்தது. இதையடுத்து அந்த மாணவியர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முஸ்லிம் மாணவியர் பர்தா அணிந்து கல்லூரிக்கு வருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக, இந்து மாணவர்கள் காவி துண்டு அணிந்து கல்லூரிக்கு வரத் தொடங்கினர். மாணவர்களுக்கு ஆதரவாக, இந்து மாணவியரும் காவி சால்வை அணிந்து வந்தனர்.

இந்நிலையில், உடுப்பி குந்தாப்பூரில் உள்ள அரசு கல்லூரியை சேர்ந்த முஸ்லிம் மாணவியர் நேற்று முன்தினம் பர்தா அணிந்து கல்லூரிக்கு வந்தனர். இவர்களை உள்ளே அனுமதிக்க கல்லூரி முதல்வர் மறுத்தார். அவர்கள் கல்லூரி வாயிலில் நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து, அந்த மாணவியர் கல்லூரிக்குள் அனுமதிக்கப்பட்டனர். ஆனால், தனி வகுப்பறையில் அமர வைக்கப்பட்டனர்.

உடுப்பி குந்தாபூர் அரசு கல்லூரி வாயிலில் முஸ்லிம் மாணவியர் பர்தா அணிந்தும், இந்து மாணவ - மாணவியர் காவி துண்டு அணிந்தும் போராட்டத்தில் ஈடுபட்டபோது, அங்கு பதற்றம் நிலவியது. அப்போது, கல்லூரி அருகே ஆயுதங்களுடன் சிலர் திரிவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் இரண்டு முஸ்லிம்களைக் கைது செய்தனர். போராட்டத்துக்குள் புகுந்து மதக் கலவரத்தை தூண்ட அவர்கள் திட்டமிட்டு இருந்தது விசாரணையில் தெரியவந்தது. அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இந்தப் பிரச்சினை, கேரளா, மகாராஷ்டிராவிலும் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது. இந்த விவகாரம் நேற்று (08) லோக்சபாவிலும் எதிரொலித்தது. பிரச்சினையை கிளப்பிய காங்கிரஸ் உறுப்பினர் பிரதாபன், "இந்த விஷயத்தில் மத்திய கல்வி அமைச்சர் தலையிட வேண்டும்" என்றார்.

பர்தா விவாதத்தை கர்நாடக அரசே உருவாக்கியதாக, காங்கிரஸ் எம்.பி.பாட்டீல் குற்றம் சாட்டினார். இதற்கு, பா.ஜ.க பதிலடி கொடுத்துள்ளது. "சீருடை கட்டுப்பாடு குறித்து ஆட்சேபனை தெரிவிப்பதற்கு முன், உங்களுக்கு சொந்தமான கல்வி நிறுவனங்களில், பர்தா அணிய வாய்ப்பளிப்பீர்களா என்பதை தெளிவுபடுத்துங்கள்" எனக் கேட்டுள்ளது.

---

மரக்காணம்

## பஸ்ஸில் தவற விடப்பட்ட 3 மாத குழந்தை



வேலூரில் சாலையோரம் தள்ளுவண்டி கடை போட்டு தின்பண்டங்களை விற்று வருபவர் விமலா. சென்னையில் பெயின்டர் வேலை செய்யும் விமலாவின் கணவர் கவியரசு சனிக்கிழமை (05) வேலூர் சென்று விமலாவிடம் பணம் கேட்டு தகராறு செய்துள்ளார். ஆத்திரமடைந்த விமலா, குழந்தையை தூக்கி செல்லுமாறு கூறியுள்ளார். உடனே கவியரசு, அன்றிரவு 11 மணிக்கு குழந்தையுடன் பஸ்ஸில் புதுச்சேரிக்கு கிளம்பினார். கல்பாக்கத்தில் பஸ் நின்றபோது, பஸ்ஸில் இருந்த சரஸ்வதி என்ற பெண்ணிடம் குழந்தையை கொடுத்தவர், இயற்கை உபாதை கழிக்க சென்றுள்ளார். அதற்குள் பஸ் சென்று விட்டதால், கவியரசு வேறு பஸ்ஸில் புதுச்சேரி பஸ் நிலையம் வந்து குழந்தையை தேடி அலைந்துள்ளார்.

குழந்தையை பஸ்ஸில் விட்டுச் சென்ற நபரை பொலிஸார் தேடி வருவதாக, நாளிதழ்களில் செய்தி வெளியானதையடுத்து, கவியரசு, விமலா இருவரும் கோட்டக்குப்பம் மகளிர் பொலிஸ் நிலையம் சென்று, குழந்தையை கேட்டுள்ளனர்.

குழந்தை, 'தொட்டில் குழந்தை திட்டத்தில்' ஒப்படைக்கப்பட்டதால், கலெக்டர் வாயிலாகத் தான் பெற வேண்டும். கலெக்டர் அலுவலகம் சென்று, குழந்தையை பெற்றுக் கொள்ளுமாறு கூறி, அவர்களை பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

---

சென்னை

## அலைபேசி பயன்படுத்த பஸ் சாரதிகளுக்குத் தடை

அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள், பணியின்போது அலைபேசி பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீப காலமாக, பஸ் ஓட்டுநர்களின் கவனக்குறைவால் விபத்துகள் அதிகரித்துள்ளன. இதுகுறித்த ஆய்வில், பணியின்போது, ஓட்டுநர்கள் அலைபேசியில் பேசுவதும் காரணம் என, கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து, ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை விடுத்து, அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில், ஓட்டுனர்கள், சட்டைப் பையில் அலைபேசி வைத்திருக்க கூடாது. தொலைதூர பஸ்களில், இரவு 11 மணியில் இருந்து, அதிகாலை 3 மணி வரை முன் இருக்கையில் அமர்ந்து, ஓட்டுநருக்கு துணையாக நடத்துநர்கள் இருக்க வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



---

கடலூர்

## சிறை கைதி தற்கொலை வழக்கு வழக்கறிஞர் கைது

கடலூர் மத்திய சிறையில் கைதி தற்கொலை செய்து கொண்ட வழக்கில், ஆறு ஆண்டுகளுக்கு பின்னர், திண்டிவனம் வழக்கறிஞர் கைது செய்யப்பட்டார்.

திண்டிவனத்தைச் சேர்ந்த சுதாகர், 2016இல் கொலை செய்யப்பட்டார். பொலிஸார் வழக்குப் பதிந்து, அதே பகுதியைச் சேர்ந்த முருகன், ஜெயகுமார் ஆகியோரை விசாரித்தனர். இதில், சுதாகரின் தம்பியான வழக்கறிஞர் குமார், சொத்துக்காக, அண்ணனை கூலிப்படையை ஏவி கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து, வழக்கறிஞர் குமார் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

சிறையில் இருந்த வழக்கறிஞர் குமார், 'என்னை பொலிஸில் காட்டிக் கொடுத்ததால், பேசியபடி பணம் தர மாட்டேன். பிணையில் எடுக்கவும் மாட்டேன். மீறி வெளியில் வந்தால் கொலை செய்து விடுவேன்' என, ஜெயகுமார் மற்றும் முருகனை மிரட்டியுள்ளார். இதனால் மனமுடைந்த ஜெயகுமார், கடிதம் எழுதி வைத்து, 2016இல் சிறையில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

ஜெயகுமார் தற்கொலை வழக்கு, சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டதை அடுத்து, வழக்கறிஞர் குமார் கைது செய்யப்பட்டார். கூலிப்படையாக செயற்பட்டவரைத் தற்கொலைக்கு தூண்டிய வழக்கில், ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர், வழக்கறிஞரை பொலிஸார் கைது செய்த சம்பவம், பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

---

திருப்பதி

## சேவல் காலில் இருந்த கத்தி குத்தி இளைஞர் பலி

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டத்தில் சேவல் சண்டை நடந்தது. அப்போது, ஒரு சேவல் காலில் கட்டி இருந்த கத்தி, சண்டையை பார்த்து கொண்டிருந்த இளைஞர் ஒருவர் காலில் குத்தியது. இரத்தம் அதிக அளவு வெளியேறியதால் அவர் உயிருக்கு போராடினார். விரைந்து அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தபோதிலும் அங்கு அவரை பரிசோதித்த டொக்டர்கள், ஏற்கெனவே அவர் இறந்துவிட்டதாகவும் "கூர்மையான கத்தி தொடை நரம்பில் குத்தியதால் அதிக அளவு இரத்தம் வெளியேறி உயிரிழந்து விட்டார்" என டொக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

---

புதுச்சேரி

## கான்ஸ்டபிள் உடற்தகுதி தேர்வு

# உடல் எடை அதிகரிக்க நூதன முறைகேடு

பொலிஸ் கான்ஸ்டபிள் உடற்தகுதி தேர்வில், உடல் எடையை அதிகரித்து காட்ட, ஆடைமேல் ஆடையாக, நான்கு ட்ரவ்ஸர் அணிந்து வந்த பெண் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

உடற்தகுதி தேர்வுக்கு வந்திருந்த ஒரு பெண், நடந்து செல்லும் முறை சற்று வினோதமாக இருந்தது. இதனால், உடற்தகுதி தேர்வு நடத்திய உடற்கல்வி ஆசிரியர்களுக்கு சந்தேகம் எழுந்தது. உடனடியாக, பெண் பொலிஸார் மூலம் அப்பெண் சோதனை செய்யப்பட்டார். அப்பெண், ட்ரவ்ஸர் மீது ட்ரவ்ஸர் அணிந்திருந்தார். ஒரு ஜீன்ஸ் மீது, 3 லோயர் ட்ரவ்ஸர் அணிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. கூடுதலாக அணிந்திருந்த ஆடைகள் 2.2 கிலோ கிராம் எடை இருந்தது. விசாரணையில், கான்ஸ்டபிள் தேர்வுக்கு வந்த அப்பெண் 43 கிலோ கிராம் எடையில் இருந்ததால், உடல் எடையை அதிகரித்து காட்டுவதற்காக, இவ்வாறு நடந்துகொண்டதாகத் தெரியவந்தது.




இன்று இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி:

# இந்தியாவை எதிர்கொள்ளுமா மேற்கிந்தியத் தீவுகள்?

இந்திய, மேற்கிந்தியத் தீவுகளுக்கு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது, அஹமதாபாத்தில் இலங்கை நேரப்படி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியா வென்ற நிலையில், தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியை மேற்கிந்தியத் தீவுகள் கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையில் உள்ளது.

முக்கியமாக இனிங்ஸின் 50 ஓவர்களையும் மேற்கிந்தியத் தீவுகள் பயன்படுத்தி துடுப்பாட்ட வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில், இந்தியக் குழாமுக்கு லோகேஷ் ராகுல் திரும்பிய நிலையில் அவர் இஷன் கிஷனை அணியில் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக அணித்தலைவர் கெரான் பொலார்ட், டரன் பிராவோ, நிக்கலஸ் பூரான், ஷே ஹோப் உள்ளிட்ட சிரேஷ்ட வீரர்கள் தொடர்ச்சியானதான பொறுப்பான பெறுபேறுகளை வெளிக்காட்ட வேண்டிய இக்கட்டான நிலை காணப்படுகின்றது.



பாகிஸ்தான் டெஸ்ட்களுக்கான

## அவுஸ்திரேலிய குழாமில் அஸ்தன் அகர்

பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் போட்டிகளுக்கான அவுஸ்திரேலியக் குழாமில் அஸ்தன் அகர் இடம்பெற்றுள்ளார்.

தவிர, மார்க்கஸ் ஹரிஸும் குழாமில் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, மிற்செல் மார்ஷும் இக்குழாமில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குழாம்: பற் கமின்ஸ் (அணித்தலைவர்), டேவிட் வோணர், மார்க்கஸ் ஹரிஸ், மர்னுஸ் லபுஷைன், ஸ்டீவ் ஸ்மித் (உப அணித்தலைவர்), ட்ரெவிஸ் ஹெட், கமரொன் கிறீன், அலெக்ஸ் காரி, மிற்செல் ஸ்டார்க், நேதன் லையன், ஜொஷ் ஹேசில்வூட், அஸ்தர் அகர், ஸ்கொட் போலண்ட், ஜொஷ் இங்லிஸ், உஸ்மான் கவாஜா, மிற்செல் மார்ஷ், மிஷெல் நேஸர், மிற்செல் ஸ்வப்ஸன்.

கரிப்பட்டமுறிப்பு பாடசாலை சமூகத்தால்

## இந்துகாதேவி கௌரவிப்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதிய நகர் கிராமத்தைச் சேர்ந்த யுவதி கணேஷ் இந்துகாதேவி பாகிஸ்தானில் நடைபெற்ற குத்துச்சண்டையில் தங்கப் பதக்கம் வென்றிருந்தார் இந்த யுவதிக்கான கௌரவிப்பு நிகழ்வு ஒன்று, ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட கரிப்பட்டமுறிப்பு பகுதியில் நடைபெற்றது. இந்த யுவதியைக் கௌரவிக்கும் நோக்கில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றை கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஏற்பாடு செய்திருந்தது.

அந்தவகையில் அன்று காலை 9 மணிக்கு கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வளாகத்தில் கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சமூகம் மற்றும் 642ஆவது படைப்பிரிவு இணைந்து நடத்திய இந்த நிகழ்வில் தங்கம் வென்ற இந்துகாதேவி, தச்சடம்பன் கிராமத்தில் இருந்து கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வரை வாகன ஊர்வலமாக அழைத்துவ ரப்பட்டு கரிப்பட்ட முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்ளின் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையையுடன் பாடசாலை வளாகத்துக்குள் அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார் கரிப்பட்ட முறிப்பு



அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் ந. சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி முகுந்தன், 59ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதி ஜி.டி .சூரிய பண்டார உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள், துணுக்காய் வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், பாடசாலை ஆசிரியர், மாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளார்கள். மிகவும் பின்தங்கிய கிராமத்தில் இருந்து தனது திறமையை வெளிக்காட்டிய மாணவிக்கு பாடசாலை சமூகத்தால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுக் கேடயமும் பணப்பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு, துணுக்காய் வலயக்கல்வி அலுவலக பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளாலும் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டுள்ளார்.

## மாத்தளை சாஹிரா தேசிய கல்லூரி வெற்றி

■ அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நாடு தளுவிய ரீதியில் நடாத்தப்பட்டு வருகின்ற 15 வயதுக்குட்பட்ட 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடினபந்து கிரிக்கெட் தொடரில், மாத்தளை சாஹிரா தேசிய கல்லூரிக்கும் மாத்தளை புனித சாந்த தோமஸ் கல்லூரிக்குமிடையில் இடையிலான போட்டியில் சாஹிரா 190 ஓட்டங்களால் அமோக வெற்றியீட்டியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாஹிரா, 50 ஓவர்களில் 378 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு, 379 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மாத்தளை புனித சாந்த தோமஸ் அணியினர் 33.3 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 188 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டனர்.



கனடா

# கனடாவில் வலுக்கும் போராட்டம்

## ஒட்டாவாவில் அவசர நிலை பிரகடனம்

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனடாவில், கொரோனாத் தொற்றுப் பரவலினால் 31 இலட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 35 000 ஐ நெருங்குவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அந்தவகையில் கனரக வாகனங்களின் சாரதிகள் அனைவரும் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டத் தடுப்பூசிகளைச் செலுத்த வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.




அத்துடன் தடுப்பூசி செலுத்தாத சாரதிகள் தனிமைப் படுத்தல் முகாமில் தங்க வைக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில், சாரதிகளும் பொதுமக்களும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக தலைநகர் ஒட்டாவாவில் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ளன. இதனையடுத்து பாதுகாப்பு நடவடிக்கையாக, ஒட்டாவாவில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்கா

## சிறுவனுக்கு 100 ஆண்டுகள் சிறை

சிறுவனொருவனுக்கு 100 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் அமெரிக்காவில பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தனது சித்திக்கு பிறந்த, அதாவது தனது தந்தையின் இரண்டாவது திருமணத்தின் மூலம் பிறந்த பெண் மற்றும் ஆண் குழந்தைகளை மூச்சைத் திணறடிக்கச் செய்து கொலை செய்த குற்றத்திற்காகவே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது 2017 ஆம் ஆண்டும் மற்றும் 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்றுள்ளதாகவும், இம் மரணங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் 13 வயதான குறித்த சிறுவனை விசாரணை செய்த போதே கோபத்தில் அவ்வாறு செய்ததாகக் கூறி, தனது குற்றத்தை அச்சிறுவன் ஒப்புக்கொண்டதாகவும் இதையடுத்து அச்சிறுவன் கைதுசெய்யப்பட்ட நிலையில் அண்மையில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் அச்சிறுவனுக்கு 100 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்கொரியா

## மெர்சிடெஸ் பென்ஸுக்கு 343 கோடி ரூபாய் அபராதம்

ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல சொகுசு கார் தயாரிப்பு நிறுவனமான மெர்சிடெஸ் பென்சுக்கு தென் கொரிய அரசு 16.9 மில்லியன் டொலர்கள் (இலங்கை மதிப்பில் 343 கோடி ரூபாய்) அபராதம் விதித்துள்ளது.

தென் கொரியாவில் உள்ள பென்ஸ் தொழிற்சாலையில் மெர்சிடெஸ் பென்ஸ் கார்களின் கரிம உமிழ்வு குறித்து, தவறாக விளம்பரப்படுத்தியதற்காகவே அந்நிறுவனத்துக்கு இவ் அபராதத் தொகை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், பென்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள 15 டீசல் கார் மொடல்களின் கரிம உமிழ்வை குறைத்து கணக்கிடும் வகையில், வாகனங்களில் மென்பொருள் நிறுவப்பட்டுள்ளதாக அந்நாட்டு வர்த்தக ஆணையகம் குற்றம் சாட்டியுள்ளது.

கனடா

## வாகனங்களில் ஒலி எழுப்பத் தடை

கனடாவின் தலைநகர் ஒட்டவாவில் அடுத்த 10 நாள்களுக்கு வாகனங்களின் ஹோர்ன்களைப் பயன்படுத்த நேற்று முன்தினம் (07) தடைவிதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அந்நாட்டில் அரசின் கொரோனா கட்டுப்பாடுகளை கண்டித்து தடுப்பூசி எதிர்ப்பாளர்கள், கனரக வாகனங்களின் சாரதிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் வாகனங்களின் ஹோர்ன்களை நீண்ட நேரத்திற்கு ஒலிக்கச் செய்து நூதனமான முறையிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதையடுத்து ஒட்டவாவில் மாகாண ஆளுநர், அவசர நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

மேலும், சாரதிகளின் கைகளுக்கு விலங்கிடுவதுபோல், அடுத்த 10 நாள்களுக்கு ஹோர்ன்கள் ஒலிக்கச் செய்வதற்குத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

3 நாள்களாக காருக்குள்

## நிர்வாணமாக இருந்த நபர்

பெண்ணொருவரின் காருக்குள் மர்ம நபரொருவர் மூன்று நாள்களாக நிர்வாணமாக இருந்த விநோத சம்பவம் பிரித்தானியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் கொலம்பியா நகரைச் சேர்ந்த பென்தனி கோகர் என்பவரின் காரிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண், கடந்த சில தினங்களுக்கு முன்னர், அவரது கார் இருக்கையில் சேறு படிந்த காலடித் தடங்கள் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகவும், அதன் பின்னர் அடிக்கடி தன்னுடைய வீட்டுப் பகுதியில் மர்ம நபர் ஒருவரின் நடமாட்டம் இருப்பதைத் உணர்ந்ததாகவும், குறிப்பாக அவரது காரின் பின்புறத்தில் இருந்து அடிக்கடி சத்தம் வருவதாகவும், எனினும் அதனை திறக்கப்பயந்து பொலிஸாரிடம் தெரியப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து பொலிஸாரின் உதவியுடன் அவரது காரைச் சோதனை செய்த போது, காரின் பிற்பகுதியில் மர்ம நபர்



ஒருவர் நிர்வாணமாக இருந்துள்ளதைக்கண்டு அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளாகவும், அதன் பின்னர் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவர் மனநலம் குன்றியவர் எனவும், காணாமற் போனவர்களின் பட்டியலில் தேடப்பட்டு வருபவர் எனவும், 3 நாள்களாக அக்காரின் பிற்பகுதியில் உறங்கி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர் மன நல மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை, 09 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.